பக்கங்கள் : பன்னிரண்டு+II

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 30 திங்கட்கிழமை (15.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 292

## ★ வன்னியிலிருந்து வெளியேறாவிட்டால் ★

# தொண்டர் அமைப்புக்களின் பாதுகாப்புக்கு அரசு பொறுப்பல்ல

## அரசாங்கத்தின் சார்பில் அறிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 15

"உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டர் அமைப்புகள் வன்னியில் இருந்து வெளியேறாமல் தொடர்ந்தும் அங்கு இருந்தால், அந்நிறுவனங்கள் மற்றும் - அதன் பணியாளர்களுக்குரிய பாதுகாப்பிற்கான பொறுப்பை இலங்கை அரசு ஏற்காது. அந்த நிறுவனங்களின் பணியாளர்களது பாதுகாப்புக்கு இனி எந்த உத்தரவாதமும் கிடையாது."

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆங்கில வார இதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சியில் விமானத் தாக்குதல்

கிளிநொச்சி, செப்.15

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வட்டக்கச்சிப் பகுதி மீது நேற்று முன்தினம் காலை 8.20 மணியளவில் விமானப் படையினரின் கிபீர் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. அதில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டு அமைப்புகளின் வைத்தியர்களையும் வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேற உத்தரவு

கொழும்பு, செப்.15

வடக்கு - கிழக்கில் உள்ள வைத்திய சாலைகளில் பணிபுரியும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த வைத்தியர்களையும் வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

வெளியேறும் அந்த வைத்தியர்களின் வெற்றிடங்களுக்கு தென்பகுதியில் உள்ள வைத்தியர்களையும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை வைத்தியர்களையும் நியமிக்கத் தீர்மானம் எடுத்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மென்டிஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)


## திருமலையில் இருவர் சுட்டுக்கொலை

திருகோணமலை, செப். 15

திருகோணமலை, கப்பல்துறைப் பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த நாதப்பன் (வயது-56) ராஜேந்திரன் (வயது-26)

(12ஆம் பக்கம் பார்க்க)



செல்வச்சந்நிதி வேலவன் தங்கரதத்தில் நேற்று பவனி வந்தான் (மேலும் படங்கள் உள்ளே)

## வவுனியாவில் அலுவலகம் அமைத்து வன்னி மக்களுக்கு ஐ.நா. உதவும்

கொழும்பு, செப். 15

வன்னியிலிருந்து வெளியேறும் ஐ.நா. அமைப்புக்கள் இனிமேல் வவுனியாப் பிரதேசத்தில் தங்களுடைய பணிகளை மேற்கொள்ளும் என இலங்கைக்கான ஐ.நா. பேச்சாளர் கோர்டன் வெய்ஸ், நேற்றிரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஐ.நா. பேச்சாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

### அதன் பேச்சாளர் நேற்றிரவு தகவல்

"வன்னியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதால் எங்களுடைய வெளியேற்றம் தாமதமடைந்திருக்கிறது. எங்களுடைய பெரும்பான்மையான உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமையே

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வான்கலன்களை சுட்டு வீழ்த்த மிக்-29 ரக விமானங்களை அரசு வாங்கும்

கொழும்பு, செப். 15

விடுதலைப் புலிகளின் விமானங்களை வேகமாகச் சென்று சுட்டுவீழ்த்துவதற்கு மிக்-29 ரக அதிவேக விமானங்களை இந்த வருடத்திற்குள் அரசு கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் தெரியவந்திருப்பவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் விமானங்கள் பறப்பில் ஈடுபடும்போது அவற்றை சுட்டுவீழ்த்தக்கூடிய வகையில் அரச வான்படையிடம் தற்போது எவ்-7 ரக விமானங்கள் உள்ளன.

ஆனால், சடுதியாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## அவசியமின்றி கொழும்பில் தங்கியிருப்போர் அறிவித்தல் கிடைத்ததும் வெளியேற்றப்படுவர்

### இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

கொழும்பு, செப்.15

"அவசியமான காரணங்கள் எதுவுமின்றி கொழும்பில் தங்கியிருப்போரை வெளியேற்றுமாறு பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து அறிவுறுத்தல் வழங்கப்படும் வரை பாதுகாப்புத் தரப்பினரால் எவரும் வெளியேற்றப்படமாட்டார்கள். இதுதொடர்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்ட உடனே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்."

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

அவசியமான காரணங்கள் எதுவுமின்றி கொழும்பில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் அவர்களை வெளியேற்ற வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை மேற்கோள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக அபிவிருத்தி குறித்து ஆராய மானிய ஆணைக்குழுத் தலைவர் வருகை

யாழ்ப்பாணம், செப் 15

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நேரில் நிலைமைகளை அறிந்து கொள்வது அவரது விஜயத்தின் பிரதான நோக்கமாகும்.

அவருடன் பல்கலைக்கழகங்களின் பீடங்களை விருத்தி செய்து கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்கான வழிகளை சிபார்சு செய்யும் மதிப்பீட்டுக் குழுவும் இங்கு வந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவ மணிகளே!

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள க.பொ.த.ப. பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி, 'உதயன்' தனது கல்விச்சுடர் ஊடாக அவர்களுக்கு ஊக்கமளிக்க உள்ளான் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

குடாநாட்டின் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதில் கடந்த மிகப்பல வருடங்களாக முன்னோடியாகத்திகழ்பவன் [illegible] நலன் நாடிய கல்வித் துறை சார்ந்த பணிகளில் முன்னோடியாக என்றும் திகழ்வது உதயனே என்பதை மாணவர்களும் பெற்றோர்களும் நன்கறிவர்.

அந்த பழுதிலாத் திறனின் ஓர் அங்கமாக மீண்டும் ஒரு முறை, டிசெம்பரில் க.பொ.த.ப. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதிய பணி இன்று ஆரம்பமாகிறது.

உள்ளே Iஆம், IIஆம் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## Message of Felicitation



We Fain felicitate
**Mr.K. Kathiramalai**
(B.com, HNDC, M.A., P.G Dip. in Edu. Sp. Tr.com)
on his appointment as the
**Director of Advanced Technological Institute, Jaffna**

(78477)

**HNDA 2 nd year (evening) students, ATI**

## நாகர, ஆகமப் பயிற்சி வகுப்புகள்

2008 மார்கழியில் நடைபெறவிருக்கும் வேதாகமப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள், சிவாச்சாரியார்கள் அநேகரின் வேண்டு கோளுக்கிணங்க வாரத்தில் இரண்டு நாள்கள் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுல கலாசாலையில் ஆகம விளக்கப்பயிற்சி வகுப்புகள், நாகர பாட வகுப்புகள் நடைபெறுகின்றன.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் அந்தண மாணவர்கள் உடன் குருகுலத்தில் பதிவுகளை செய்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தினர். (78482)

## கண்ணீர்க் காணிக்கை



இசைத்துறையில் புகழ்பூத்த நாதஸ்வர இரட்டையர்களில் ஒருவரான

**வி.கே. கானமூர்த்தியின்**

மரணம் இசை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அமரரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது சமூகம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

(78481) சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக நலன்விரும்பியும் நல்லூர் பிரதேசசபை உத்தியோகத்தருமான வெ.கனகநாயகம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சோமாபதி வெற்றிவேல்**

அவர்கள் 13.08.2008 அன்று இந்தியாவில் சிவபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சம்பியன் லேன், கொக்குவில்.
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம், வளர்மதி நிறைவாழ்வகம்.

'தேவ பணிக்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு ஸ்தோத்திரம்'

**போதகர் வண.**

## பேதுருப்பிள்ளை இக்னேஷியஸ் டேவிட்

'நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்' (மத்தேயு: 13:43)



தேவனுடைய இராச்சியத்தைக் கட்டுவதிலும் தேவபணியிலும் எம்முடன் கூட நின்று எமக்கு ஆசானாக, ஆயனாக பல வழிகளிலும் உதவியதுடன் தேவபணியில் மிகக் கவனமாக ஊழியம் செய்து தேவ சன்னிதானத்தில் இளைப்பாறும் எம் அன்பு மிகு பாஸ்ரர் **பேதுருப்பிள்ளை இக்னேஷியஸ் டேவிட்** அவர்களின் வாழ்க்கைக்காகவும் தேவபணிக்காகவும் எல்லாம் வல்ல கர்த்தருக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்கள்.

இன்று (15.09.2008) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள அப்போஸ்தல சபையில் நடைபெறும் நன்றி ஆராதனையில் கலந்துகொள்ளும்படி விசுவாசிகள், போதகர்மார், ஊழியர்கள், உறவினர்கள், நண்பர்களை அழைக்கிறோம்.

(78478) அப்போஸ்தல சபை, வட பிராந்தியம்.

## மரண அறிவித்தல்

### பீற்றர் நிறஞ்சன்



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், இல.01, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பீற்றர் நிறஞ்சன் (பழைய மாணவன்,யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி) அகாலமரணமானார்.

அன்னார் பீற்றர் (முன்னாள் ஊழியர், யாழ். மாவட்ட வி.நு.கூ.ச.சமாசம்)-றெஜின் சறோஸ் தம்பதியினரின் அன்பு மகனும், பிறேமதாஸ்(மேக்கன்ரைல்), பசில்தாஸ், கொன்சலா சபீனா (Staff-SKY Computer) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி மே.றோ.பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி ம.ஜே.அலெக்ஸ்சாண்டர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி றீ.இம்மானுவேல்(ஜேர்மனி),திருமதி யோ.யோசப் ராஜகாரியர்(ஓய்வுபெற்ற பரிசாரகர்), திருமதி பு.மகேந்திரன், வரப்பிரகாசம் (வவுனியா), அலெக்சாண்டர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெறாமகனும்,லோறன்ஸ் அன்ரனி (பிரான்ஸ்), திருமதி ம.எட்வேட் மரியதாஸ் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்கான இரங்கல் திருப்பலி இன்று (15.09.2008) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.புனித மரி யன்னை பேராலயத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 0779103353 (A)
தகவல்: குடும்பத்தினர்.

## இன்றைய ஆட்டங்கள்

வலி. வடக்கு, செப். 15

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட் கிழமை பி.ப. ஒரு மணிக்கு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

14 வயதுப் பிரிவு- காலிறுதி

* அராலி கிழக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் அராலி சரஸ்வதி ம.வி
* வட்டு மத்திய கல்லூரி எதிர் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
* அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை எதிர் வட்டு. இந்துக் கல்லூரி
* சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி எதிர் தொல்புரம் விக்னேஸ்வராக் கல்லூரி

18 வயதுப் பிரிவு - அரையிறுதி

* வட்டு. இந்துக் கல்லூரி எதிர் வட்டு. மத்திய கல்லூரி. (202-86)

## சைமன்ஸ் நீக்கப்பட்டமை கிரிக்கெட்டுக்கு பேரிழப்பு

### ஷேவாக் கருத்து!

புதுடில்லி, செப். 15

ஆஸ்திரேலிய அணியின் ஆன்ட்ரூ சைமன்ஸ் இடம்பெறாதமை இந்திய அணிக்கு சாதகமானது என்றாலும், அவர் இல்லாதது கிரிக்கெட்டுக்கு இழப்பு என்று இந்திய வீரர் வீரேந்திர ஷேவாக் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு வருகை தந்து டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. இதற்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் சகலதுறை வீரர் அன்ட்ரூ சைமன்ஸ் இடம்பெறவில்லை. ஒழுக்கக் குறைவாக நடந்துகொண்டதையடுத்து அவர், அணியில் சேர்க்கப்படவில்லை. இந்நிலையில் இந்திய வீரர் வீரேந்திர ஷேவாக் சைமன்ஸ் நீக்கப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பவை வருமாறு:-

ஆன்ட்ரூ சைமன்ஸ் ஆஸ்திரேலிய அணியில் இடம்பெறாமை நிச்சயம் இந்தியாவுக்கு சாதகமானது. தன்னுடைய துடுப்பாட்டம் அல்லது பந்துவீச்சு மூலம் ஆட்டத்தின் போக்கை மாற்றிவிடும் திறன் படைத்தவர் சைமன்ஸ். 5 ஆவது அல்லது 6 ஆவது இடத்தில் அவர் அபாயமான ஆட்டக்காரர்.

எனவே, சைமன்ஸ் இல்லாதமை நிச்சயம் இந்திய அணிக்கு சாதகமாகவே இருக்கும். ஆனால் சைமன்ஸ் போன்ற தரமான வீரர் அணியில் இடம்பெறாதமை கிரிக்கெட்டுக்கு இழப்பு.

ஆஸ்திரேலிய தொடர் சவாலாக இருக்கும். மிகவும் சிறப்பாக ஆடினால் மட்டுமே ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியும். திறன் வாய்ந்த சுழல் பந்துவீச்சாளர் இல்லாதமை ஆஸ்திரேலியாவுக்குப் பாதகமாக அமையலாம். - இவ்வாறு அவர் கூறினார். (சி)

### குண்டுவெடிப்புக் காரணமாக

## இந்தியா செல்ல ஆஸி. தயக்கம்?

புதுடில்லி, செப். 15

டில்லியில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு வருவதில் தயக்கம் ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய அணி எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியாவுக்கு வருகிறது. அந்த அணி 4 டெஸ்ட் போட்டிகளில் ஆடுகிறது. முதல் டெஸ்ட் ஒக்ரோபர் 9 ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகிறது. அதற்கு முன்னதாக இரண்டு பயிற்சி ஆட்டங்களில் விளையாடுகிறது.

குண்டு வெடிப்பு நடைபெற்ற டில்லியில் 3 ஆவது டெஸ்ட் போட்டி ஒக்ரோபர் 29, நவம்பர் 2 ஆகிய தினங்களில் நடைபெறுகிறது.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இந்தியாவில் பாதுகாப்புக் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சங்கம் பாதுகாப்பு ஆலோசகரிடம் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு மேலாளர் ரெகடிகசன் மற்றும் பீட்டர் யங் ஆகியோர் ஆய்வு செய்து அறிக்கையைத் தாக்கல் செய்வார்கள்.

குண்டுவெடிப்பு சம்பவத்தால் இந்தியா - அவுஸ்திரேலியா டெஸ்ட் போட்டியில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று இந்தியக் கிரிக்கெட் சபைச் செயலாளர் நிரஞ்சன் ஷா கூறியுள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த நாதஸ்வரமேதை

**கலாபூஷணம் வி.கே.கானமூர்த்தி**

அவர்களின் மறைவைக்கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன், கொக்குவில்.
வளர்மதி முன்னேற்றக் கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11★06★1925
உதிர்வு 28★08★2007

அமரர்
**வல்லிபுரம் கிருஷ்ணராஜா**

திதி: 15.09.2008

நிலையில்லா இவ்வுலகில் நிலைத்துவிட்ட உங்கள் அன்பால்
யாவர்க்கும் இனியவராய் வாழ்ந்து
எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவை மறக்க முடியாது
நாம் நீந்துகின்றோம் கண்ணீர்க் கடலில்!

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 ★ 01 ★ 1959



மறைவு 17 ★ 09 ★ 2005

**சரவணை தவராஜா**

(பனை அபிவிருத்திச்சபை கணக்குப் பதிவாளர்)

திதி: பூரணை

அன்பாய்ப் பேசி பண்பாய் வாழ்ந்த - எம் குடும்ப விளக்கே
ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் மாறலாம் கோலங்கள் மறையலாம்
கடைசியாய் நிலைத்திருக்கும் உம் நினைவுகளுடன்
மூன்றாண்டுத் திதியில் உமை நினைத்து வணங்குகின்றோம்.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

684, கண்டி வீதி, அரியாலை. (78479)
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் ஜெயக்குமார்




கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் ஜெயக்குமார் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், ராகினியின் அன்புக் கணவரும், சிவலஜா (இத்தாலி), யஸ்மீரன் (சா/இந்துக் கல்லூரி மாணவன்), மித்திரா (சா/இந்துக் கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கீர்த்தனனின் (இத்தாலி) மாமனாரும், சறோஸ் மலர், சரஸ்வதி, சிவராசா, சிவகுமார் (கனடா), தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தசாமி, சுப்பிரமணியம், சந்தானலட்சுமி, சுகந்தி (கனடா), கணேசானந்தன் (நீர்ப்பாசனத் திணைக்களம் (மத்தி), வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், சிவனுஜா (சா/இந்துக் கல்லூரி ஆசிரியர்), சிவாநந்தினி (கனடா), சியானி (ஜேர்மன்), சுயன், மயூரதி, அஜந்தினி, ஜெய்சன் (கனடா), ஜனனி (கனடா), ஆரணி (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், சுதர்சினி, சுதர்சன் (சுவிஸ்), தர்சினி, சுரேந்திரன், சுதாகரன் (கனடா), சாந்தா (சுவிஸ்), சுகந்தன் (சுவிஸ்), விஜயா (கனடா), சுகந்தி (லண்டன்), சுரேந்திரன் (லண்டன்), சித்திரா, சுரேன் (லண்டன்), சித்ரா, ஜீவகன், மதன், சிந்துஜா, கோபிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.09.2008 சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் வேம்பிராய் இந்து மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கல்வயல், சாவகச்சேரி. (78476)
க.சுதர்சன் (அப்பன்) மருமகன் (சுவிஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. வேற்பெருமான் தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பதற்கு எழுந்தருளி வருவதை முதலாவது படத்திலும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கிக் கொண்டு வீதியுலா வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்-சுந்தா)

# வவுனியா இராணுவத் தளத்தின் மீது புலிகள் நடத்திய மும்முனைத் தாக்குதல்

**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்புத்துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் நேற்று 14.09.2008 ஆம் திகதி எழுதியுள்ள களநிலை ஆய்விலிருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை கடற்படை தளத்தின் மீது விமானத் தாக்குதல்



தாக்குதல் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட புலிகளின் தற்கொலைச் சாதனங்கள் அடங்கிய பொதி.

நடத்தி இரண்டு வாரங்கள் கூட முடிவுறாத நிலையில் வான் புலிகள் மீண்டும் ஒரு தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்.

கடந்தவாரம் செவ்வாய்க்கிழமை வன்னிப் பிரதேச பாதுகாப்புப்படை தலைமையகமான வவுனியா படைத்தளம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இந்தப் படைத்தளம் மீதான தாக்குதல் ஆறு அல்லது ஏழு நிமிட இடைவேளையில் மூன்று தடவைகள் இடம்பெற்றுள்ளன.

முதலில் புலிகள் அணியொன்று விமானப் படையின் ராடர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள பகுதிக்குள் ஊடுருவி தரையில் மோதல் ஒன்றில் ஈடுபடலாயிற்று. அடுத்து ஆட்டிலறி மற்றும் மோட்டார் எறிகுண்டுகள் வந்து விழத் தொடங்கின. அடுத்து செக் தயாரிப்பான ஸ்லிம்-Z-143 ரக விமானங்கள் இரண்டு வானில் தோன்றிக் குண்டுகளை வீசின.

**கட்டடம் ஒன்று சேதமடைந்தது**

வவுனியாவிலுள்ள- வன்னிப் பிராந்தியத்திற்கான பாதுகாப்பு படைகளின் தலைமையகத்திலுள்ள கட்டடம் ஒன்று புலிகளின் தரைவழி, ஆட்டிலறி மற்றும் விமானக் குண்டு வீச்சில் சேதமடைந்தது.

வவுனியாவின் வான் பரப்பு ஒளிமயமானதுடன், குண்டுத் தாக்குதல்களின் காரணமாக அப்பிரதேசத்திலுள்ள வீடுகளின் கதவுகள், யன்னல்கள் எல்லாம் அதிர்ந்து ஆடி அச்சமூட்டுவனவாகவிருந்தன. பல வருடங்களாக அரச படைகளின் வசமுள்ள பகுதிகளுக்கும் வன்னியில் புலிகள் வசமுள்ள பகுதிகளுக்கும் இந்தப் பகுதியே வாயில் 'கேட்' பகுதியாக இருந்துவந்துள்ளது. கடந்த சில மாதங்களாக ஏ-9 பாதையின் மேற்குப்புறமாக பெரும் பகுதி நிலத்தை புலிகளிடமிருந்து இராணுவம் கைப்பற்றியிருக்கின்றது.

தாக்குதல் பற்றிய செய்தி கிடைத்தவுடன் கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் அனைவரும் படுக்கைகளை விட்டுக் கிளம்பி செய்தித் தொடர்பு அலுவலகங்களில் புகுந்து நிலைமைகளை அவதானிக்கலானார்கள். ஐந்தரை மணிநேரம் நீடித்த மோதல்கள் தொடர்பாக நிமிடத்துக்கு நிமிடம் தகவல்கள் வந்து கொண்டிருந்தன.

அன்றைய தினம் விடியற்காலை 3 மணிக்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் சம்பவங்கள் ஆரம்பித்தன. தனியான பகுதியொன்றை ஊடறுத்துக்கொண்டு 14 கெரில்லாக்கள் இராணுவப் பகுதிக்குள் நுழைந்தார்கள். பிரதானவாயிலுக்கப்பால் வளாகம் விஸ்தாரமான பகுதிக்கு விரிவடைகின்றது. அவர்கள் இராணுவ உடை தரித்திருந்தார்கள். இரண்டு விசேஷ இராணுவப் பிரிவுகளின் கட்டடங்களைக் கடந்து போனார்கள். இங்குதான் துப்பாக்கிச்

# இராணுவ உடையில் புலிகள் உள்ளே நுழைந்து சாகசம்

சண்டை ஆரம்பமானது. விழிப்படைந்த விஷேட படையினர் கெரில்லாக்களுடன் மோதத் தொடங்கியவுடன் மூன்று தற்கொ



இந்திரா II (2D) ரேடர் அமைப்பு வவுனியா வன்னிப் பாதுகாப்பு படைத்தலைமையகத்தில் நிறுவப்பட்டிருக்கும் இடம்.

லைப் படைப் பெண் போராளிகள் தாம் தரித்திருந்த குண்டுகளை வெடிக்க வைத்து சிதறடித்தார்கள். இன்னொருவர் 'சைனைட்' குப்பியைக் கடித்து தற்கொலை புரிந்து கொண்டார். ஏனையவர்கள் முன்னேறி தமது ரைப்பிள்களால் தாக்குதல் நடத்திக் கொண்டு எறிகுண்டுகளை விசைகருவிகள் மூலம் இந்திரா II ராடர் கருவிகள் பொருத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கிச் செலுத்தினார்கள்.

ராடர்க் கருவி சேதமடைந்தது. அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த இந்திய பராமரிப்பு தொழில் நுட்பவியலாளர்கள் ஏ.கே. தாகூர் மற்றும் சிந்தாமணி ராண்ட் என்பவர்கள் காயமடைந்தார்கள். இவர்கள் பின்னர் அநுராதபுரத்துக்கும் அங்கிருந்து கொழும்புக்கும் சிகிச்சைக்காக விமானத்தில் கொண்டு செல்லப்பட்டார்கள்.



வவுனியா பாதுகாப்புப் படை வளவுக்குள் கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சேதமடைந்த கட்டடங்களில் ஒன்று.

அதே தினம் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்த இன்னொரு இந்திரா- II ராடர்க் கருவி அவசரமாகச் சேதமடைந்த கருவிக்குப் பதிலாகப் பொருத்துவதற்காக அவ்விடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வவுனியாவில் பொருத்தப்பட்டிருந்த ராடர் கருவிதான் வன்னியில் இருந்து புறப்படும் எந்த விமானத்தையும் முதலில் இனம் கண்டு அறிவித்து வந்தது என்பதால் அவைகளைத் தகர்த்து ஒழிப்பதே புலிகளின் நோக்கமாக இருந்துள்ளது. அன்றைய தினமே ராடர் கருவி மீள நிறுவப்பட்டு விட்டதால் வவுனியா வான்பரப்பில் புலிகள் இலகுவில் புகுந்துவிட முடியாது என்று அதிகாரிகள் கூறிக் கொண்டார்கள்.

இந்திய முன்னாள் பிரதமமந்திரி இந்திரா காந்தியின் பெயரிடப்பட்ட நான்கு ராடர்க் கருவிகள் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

புலிகள் தமது விமானப்படையில் விமானங்களையும் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று 2005இல் தெரியவந்ததையடுத்து இலங்கைக்கு இந்திரா II ராடர் கருவிகளை இந்தியா வழங்கியிருந்தது. கடலில் கப்பல்களையும் வானில் விமானங்களையும் மின்காந்த நுண் அலைகளின் மூலம் கண்டுபிடிப்பதற்கு ராடர்க் கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. 2-D ராடர்கள் தூரத்தையும் திசையையும் காட்டி விடும் அதேசமயம் 3-D ராடர்கள் விமானம் எந்த உயரத்தில் சஞ்சரிக்கின்றது என்பதைத் தெளிவாகக் காட்டிக் கொடுக்கும்.

இராணுவத்தின் 211 ஆவது பிரிகேட் அமைந்துள்ள இடத்துக்கு மிக அருகாமையிலேயே தாக்குதலுக்குள்ளான விமானத்தளம் அமைந்துள்ளது. எனவே இந்த இலக்கைத் தாக்குவதற்குப் புலிகள் மாதக் கணக்கில் தகவல்களை சேர்த்து பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

**விசேடபடை அணிப் பிரிவு**

புலிப் போராளிகள் ஊடுருவிய பகுதியில் விசேஷ படையணிப் பிரிவுகள் இருந்தமையை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்று தோன்றுகின்றது. இந்தப் படையினர் புலிப் போராளிகளை எதிர்பாராத விதமாகத் தாக்கி அதிர்ச்சியடையச் செய்துள்ளனர். தற்கொலை செய்துகொண்டவர்களைத் தவிர ஏனையவர்களை குறுகிய காலத்தில் சுட்டுக் கொன்று விட்டனர். இதனால் அவர்கள் திட்டமிட்டிருந்த பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுவிட்டது.

**குண்டு மழை பொழிந்தது**


தரையில் தாக்குதல் நடைபெற்ற அந்த சில நிமிடங்களில் அந்தப் பகுதியில் பெருமளவில் ஆட்டிலறி மற்றும் மோட்டார் குண்டுகள் வந்து விழுந்தன. ஓமந்தையில் கெரில்லா பரிசோதனை நிலையத்துக்கு சில கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புளியங்குளத்துக்கு அருகில் இரண்டு 130 எம்.எம். ஆட்டிலறித் துப்பாக்கிகளைப் புலிகள் பொருத்தியிருக்கிறார்கள் என்று உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மோட்டார்களும் அருகாமையிலுள்ள ஓர் இடத்திலிருந்தே ஏவப்பட்டுள்ளன.

கெரில்லா தற்கொலைப் பொதியொன்று தாக்குதல் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டது. ஒரு போராளி மரம் ஒன்றில் ஏறி இருந்துகொண்டு உள் புகுந்த போராளிக்கு வாக்கிடோக்கி மூலம் அவர்கள் நகரவேண்டிய திசைகளை தெரிவித்துக் கொண்டிருந்துள்ளார் என்பதை பொலிஸார் பின்னர் அறிந்து கொண்டனர். சில ஆட்டிலறி குண்டுகள் இலக்கை தவறவிட்டு வீடுகளுக்கருகிலும் வீழ்ந்துள்ளன.

தேக்குத்தோட்டம் (Teak Garden) என்ற இடத்தில் குறைந்தது இரு பொதுமக்களும் ஒரு குழந்தையும் காயமடைந்துள்ளார்கள். அவர்களுக்கு வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டது. ஓர் இடத்தில் ஆறு கால்நடைகளும் கொல்லப்பட்டிருந்தன.

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம் பார்க்க)





செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் அங்க[illegible] [illegible]காவடி, ஆட்டக்காவடி எடுத்தும் பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாதம் 23முதல் 26வரை அரச பாடசாலைகளுக்கு லீவு

கொழும்பு, செப்.15

நடைபெற்று முடிந்த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்காக சகல அரச பாடசாலை மாணவர்களுக்கும் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை விடுமுறை காலமாக கல்வி அமைச்சு அறிவித்தது.

கல்வி அமைச்சின் செயலாளர் நிமால் பண்டார இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை விடுமுறையானது மாணவர்களுக்கு மட்டுமே. ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்கு சமுகம் அளிக்கவேண்டும் என்றும் இவ்வாறு மூடப்படும் பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி கல்விச் செயற்பாட்டிற்காக திறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக பாடசாலைகள் மூடப்படுவதனால் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதற்கு ஆசிரியர் சங்கம் பொறுப்பு கூறவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்பிற்கு அமைய எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார். (சி)

## கோப்பாய் பிரதேசத்தில் அடிக்கடி மின்வெட்டு

கோப்பாய்,செப்.15

கோப்பாய், இருபாலை பிரதேசங்களில் அடிக்கடி மின்தடையேற்படுவதாக பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

உரிய மின்தடை நேரத்தைத் தவிரவும் பல்வேறு நேரங்களில் மின்தடை ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றனர்.

## வவுனியா இராணுவ...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம் திருப்பித் தாக்கியதில் ஒரு ஆட்டிலறி நிலை அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இது சாத்தியமில்லையென்று சுதந்திர விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

விடியற்காலையில் நடத்திய தாக்குதலில் 70 அல்லது 80 ஆட்டிலறிக் குண்டுகளைப் புலிகள் ஏவியுள்ளனர். அன்று பிற்பகலிலும் இரண்டு குண்டுகள் வந்து விழுந்துள்ளன.

காலைத் தாக்குதலுக்கு சில நிமிடங்கள் கழித்துப் புலிகளின் இரண்டு விமானங்கள் வானில் தோன்றின. முதல் வந்த செய்திகளின் படி அவை எட்டுக் குண்டுகளை வீசின. நான்கு விமானப்படை தளத்தின் மீது விழுந்தன. மற்ற நான்கும் நிர்வாகக் கட்டடங்கள் உட்பட பல உட்கட்டமைப்புகள் கொண்ட பகுதிகளில் விழுந்துள்ளன. மூன்று வெடிக்கவில்லை. பின்னர் நடந்த ஆய்வுகளால் எத்தனை வெடித்துள்ளன என்பதிலும் எத்தனை வீசப்பட்டன என்பதிலும் சரியான முடிவு தெரியவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன.

விமானப்படைத் தளத்தின் அருகில் உள்ள கட்டடங்களின் கூரைகள் மோசமாக சேதமுற்றிருந்தன. பொலீஸ் பிரிவில் இருந்தவர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டார்கள். ஏனென்றால் ஆயுத தளபாடங்கள் இருந்த பகுதியின் கூரையும் மோசமாக சேதமுற்றிருந்தது. ஆனால் கீழே இருந்த கொங்க்றீட் பலகையொன்று ஆயுதங்கள் சேதமுறாமல் பாதுகாத்துள்ளது. ஒரு பவுசர், டிரக் மற்றும் டிராக்டர் ஒன்றும் சேர்த்து ஆறு வாகனங்கள் சேதமுற்றன.

### 5 பெண் போராளிகள்

இராணுவ வளாகத்துக்குள் ஐந்து பெண் பேர்ராளிகள் உட்பட 10 போராளிகள் உடல்கள் எடுக்கப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. அன்று பகல் ஆண்போராளி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டு எல்லாமாக 11 சடலங்களாக அதிகரித்தன.

ஆரம்ப விசாரணைகளின்படி 14போராளிகள் உள்நுழைந்தனர். மூன்று பேர் பின்னர் தப்பிவிட்டனர். அசால்ட் ரைபிள்கள், ஆர்.பி.ஜி.கள், எறிகுண்டுகள், தொடர்பு கருவிகள், யந்திரத் துப்பாக்கிகள் மற்றும் பொருள்களை அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர். அன்று விமானப்படையின் தகவல்களின் படி ஜெட் விமானம் புலிகளின் விமானங்களில் ஒன்றை சுட்டுவீழ்த்தியதாகக் கூறினார்கள். ஆனால் தாக்குதல் நடத்திய தங்கள் விமானங்கள் பத்திரமாக நிலைக்குத் திரும்பி விட்டதாக புலிகள் அறிவித்தனர். ஆனால் இரண்டு கூற்றுக்களும் பொது தரப்புக்களினால் உறுதிப்படுத்தப்படவில்லை. (ப)

## தவறிவிட்டது

4 ஆம் வட்டாரம், மண்டைதீவு என்னும் முகவரியைச் சேர்ந்த கிறிஸ்துராசா கில்மெட் ராஜ் என்பவரது தேசிய அ.அட்டை (89160 [illegible]) 12.09.2008 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அலை அரசி வெலிக்கடை, சந்திரச்சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்

## கண்ணீர் அஞ்சலி

விடுதி இல.24 இல் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் ஏ.நவரட்ணம் அவர்களின் தந்தையார்

**கிருஸ்ணர் ஏரம்பு** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**1999 A BATCH தாதிய உத்தியோகத்தர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

விடுதி இல.24 இல் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் ஏ.நவரட்ணம் அவர்களின் அன்புத் தந்தையார்

**கிருஷ்ணர் ஏரம்பு**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விடுதி இல.: 24இல் பணிபுரியும்,
வைத்தியர்கள்,
தாதிய உத்தியோகத்தர்கள்,
சிற்றூழியர்கள்.

## விண்ணக வாழ்வில் ஈராண்டு நினைவு

"வாழ்ந்தாலும் இறந்தாலும் - நாம் இறைவனுக்கே உரியவர்கள்"



**அருளப்பு றோக்ஸ் அருளானந்தம்**

மண்ணில் மகனாக 17.04.1943 — விண்ணில் ஒளியாக 14.09.2006

ஆதாரக் குல விளக்கே
ஆருயிர் அப்பாவே
நீரின்றி நாமிங்கே
நிழலின்றித் தவிக்கின்றோம்
இன்னும் மறையவில்லை
எம்முடன்தான் வாழ்கின்றீர்

107/3, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

அன்னாரின் அன்பின் நினைவில்
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேர்த்தி.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி **இந்திரா பத்மலிங்கம்**

அன்னை மடியில் 15.03.1947

அரன் அடியில் 16.08.2008

16.08.2008 அன்று இறைவனடி சேர்ந்த திருமதி இந்திரா பத்மலிங்கத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் மற்றும் கடிதம் மூலமும், தொலைபேசி மூலமும், ஆறாத் துயரில் மூழ்கியிருந்த எமது குடும்பத்தினருடன் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அன்னார் நோயுற்று இருந்த வேளை அவரின் உயிர்காப்புக்காய் இறுதிவரை உழைத்த பிரதான வைத்தியர், உதவி வைத்தியர்கள் மற்றும் தாதியர், சிற்றூழியர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்று அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்தவர்களுக்கும், மேலும் சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (15.09.2008) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


சிவன்வீதி,
உடும்பிராய் கிழக்கு,உடும்பிராய். (78475) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் ஏரம்பு நவரட்ணம் அவர்களின் பாசமிகு தந்தையாரான **கிருஸ்ணர் ஏரம்பு** அவர்கள் காலமானதையிட்டு துயறுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் குடும்பத்தில் நடைபெற்ற அனைத்து மங்கல நிகழ்வுகளிலும் குடும்ப சகிதம் கலந்துகொண்டு சிறப்பித்ததோடு, தேனிலுமினிய தன் மங்கல நாதஸ்வர இசையினையும் வழங்கி எம்மையெல்லாம் ஆசீர்வதித்த அருமை நண்பன்

உயர்திரு.**கானமூர்த்தி**

அவர்களின் ஆத்மா அரசடி விநாயகர் பதம் சேர நாம் அனைவரும் உளமாரப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளுடன் எம்மையும் இணைத்துக் கொள்கின்றோம்.

**ச.சிவகுமாரன் குடும்பத்தினர்,**
*கட்டுடை, மானிப்பாய்.*

IIS
கணிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரவுகள் ஆரம்பம்

2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே உங்களுக்காகவே விசேட கட்டணச் சலுகையில் அனைத்துக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| பிரிவுகள் | ஆரம்பம் | |
|---|---|---|
| பிரிவு 03. | 19.09.2008 | காலை 10.00 மணி |
| பிரிவு 04. | 20.09.2008 | காலை 10.00 மணி |

கற்கை நெறிகள்

01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerized Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management System
10. Certificate in Auto CAD
11. Certificate in Java Programming
12. Certificate in Visual Basic Programming



INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 6933

## மரண அறிவித்தல்

### சந்தியாப்பிள்ளை சூசைதாசன்



ஈச்சமோட்டை, கடற்கரைவீதி, பாஷையூரைப் பிறப்பிடமாகவும், 21,இராஜவீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை சூசைதாஸ் (13.09.2008) சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தி சந்தியாப்பிள்ளை - சந்தியாப்பிள்ளை மாக்கிரட் (தங்கம்) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பசுபதி (தாய்மாமன்), திருமதி பசுபதி வெள்ளையம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் றெஜீஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான றெஜீனா (சாந்தம்), கிறேஸ்மலர் மற்றும் மொனிக்கா, தேவசிகாமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சிதமலர், தேவதாசன், குணரெட்ணம், மேசி லிசியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிமோச், அனோஜி, ஸ்ரெபானி (பிரான்ஸ்), பிரசன்னா (பிரான்ஸ்), ஜெனிபர் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் ரெனிஸ், தனுசன், டிசோனா, மெல்வியா, மியூரி, யோயல் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (15.09.2008) திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*21,இராஜவீதி, நல்லூர்.* — ப.குணரெட்ணம் (மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருமறைக் கலாமன்றம் நடத்திய கிராமியக் கலை அரங்கு நிகழ்வு நேற்றுமுன்தினம் கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் மூத்த கலைஞர் எஸ்.ரி.அரசு உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் முதலிரு படங்களிலும் காணலாம்.
கலை நிகழ்வுகளின் காட்சிகளை அடுத்துள்ள படங்களில் காணலாம்.
(படங்கள்: லக்ஷ்மன்)

## சாவகச்சேரி சுகாதாரப் பிரிவில் தாய்ப்பால் விழிப்புணர்வு வாரம்

யாழ்ப்பாணம், செப்.15

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் குடும்பநல சேவையாளர் பிரிவுகளில் தாய்ப்பால் விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இப் பிரதேசத்தில் உள்ள 86 தாய்மார் குழுக்கள் இந்த விழிப்புணர்வு வாரத்தினை நடத்தவுள்ளனர்.

இந்த வாரத்தில் தாய்மார் குழுக்கள் தமது மட்டத்திலும், பாடசாலைகளில் பிரார்த்தனை வேளையிலும், திணைக்கள அலுவலகங்களிலும் தாய்ப்பாலின் மகத்துவம் பற்றி பிரசாரம் செய்யவுள்ளனர்.

இறுதி நாளான செப்ரெம்பர் 19 ஆம் திகதி அனைத்து பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலும் தாய்மார் குழுக்களால் தலாட்டுப் பாட்டு தாளலயம், கவிதை, நாடகம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது.

தாய்ப்பால் விழிப்புணர்வு வாரம் தொடர்பான பதாதைகள் பிரதேசத்தின் பல இடங்களிலும் கட்டப்பட்டுள்ளன.

(202-207)

## சமுர்த்தி நிவாரணத் தொகையை அதிகரிக்குமாறு மண்டைதீவுப் பிரதேச மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.15

சமுர்த்தி நிவாரணத்தை அதிகரித்துத் தருமாறு மண்டைதீவைச் சேர்ந்த 100 பேர் நேற்று முன்தினம் மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ். அலுவலகத்திற்குச் சென்ற அவர்கள் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.ஏ. உதயனைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் மகஜரையும் கையளித்தனர்.

இவ்விடயம் குறித்து சமூக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று நல்ல தொரு தீர்வைப் பெற்றுத் தருவதாக இணைப்பதிகாரி உறுதியளித்தார். (202)

## கோப்பாயில் பல பகுதிகளிலும் பாதீனியப் பெருக்கம் அதிகரிப்பு

கோப்பாய், செப்.15

கோப்பாய், நீர்வேலி, புத்தூர் ஆகிய பிரதேசங்களில் பாதீனியத்தின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் விவசாயச் செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தோட்ட நிலங்கள், வயல் பிரதேசங்கள், மதகுகள் மற்றும் காண்கள் போன்ற பகுதிகளிலேயே பாதீனியம் அதிகளவில் பரந்து வளர்ந்துள்ளது.

சில இடங்களில் பாதீனியத்தை வெட்டி அழிக்கும் நடவடிக்கைகளில் பொது மக்கள் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. (202-72)




## லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் இவ்வாரம் குடாநாட்டுக்கு விஜயம் செய்கிறார்

யாழ்ப்பாணம், செப்.15

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களுக்கு விஜயம் செய்யும் மாவட்ட ஆளுநர் கழகங்களினால் மேற்கொள்ளப்படவுள்ள நலத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு எதிர்வரும் 19 ஆம் திகதி விஜயம் செய்யும் மாவட்ட ஆளுநர் கழகத்தின் இலவச கணனிப் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைப்பதுடன் கழகத்தினால் நடத்தப்பட்ட இலவச மருந்துவ பரிசோதனை முகாம்களில் கண்பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவர்கள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆகியோருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கவுள்ளனர். இத்தகவலை கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (202-207)

## குடாநாட்டில் தேங்காய் உற்பத்தியை ஊக்குவிக்க நல்லின நாற்றுக்கள் தருவிக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் பல்வேறு செயற்றிட்டங்கள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்றிட்டத்தின் கீழ் இம்முறை யாழ். மாவட்டத்தில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும்நடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது காணப்படும் விலை அதிகரிப்பை கருத்தில் கொண்டு இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருவதாக மீள் நிர்மாணத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக கமநல அபிவிருத்தித் திணைக்களஉதவியுடன் லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து 9000 நல்லின நல்லின நாற்றுக்களைத் தருவித்து பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப் படுக்கின்றன. இவற்றில் 2000 3 வருட காலத்தில் கூடிய விளைச்சலைத் தரக் கூடிய இனமாகும். ஏனைய 7000 எண் ணிக்கையானவை 5 வருடத்தில் பயன்தரக் கூடியவை.

இதன்மூலம் சுற்றுச்சூழல் மேம்படுத் தப்படுவதுடன் பயனாளிகளின் வாழ்க்கை மட்டமும் உயர் வடைந்து மாவட்டத்தின் உற்பத்தியும் அதி கரிக்க வாய்ப்பு ஏற்பட் டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,செப்.15

நிக்கொட் உதவித் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் விதைநெல் உற்பத்தி செய்த விவ்சாயிகளுக்கு அரிவி வெட்டும் கருவியும், சூடடிக்கும் கருவியும் வழங்கப்பட்டன.

திருநெல்வேலி விவசாய பண்ணையில் இவை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## முன்பள்ளிகளிலேயே பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு அத்திவாரம் போடப்படுகின்றது

### வலி.கிழக்கு பிரதேச செயலர் கருத்து

யாழ்ப்பாணம், செப்.15

சிறார்களின் முன்பள்ளிப் பருவத்திலேயே எதிர்கால வாழ்க்கைக்கான அத்திவாரம் போடப்படுகின்றது; அடிப்படை விடயங்கள் ஊட்டப்படுகின்றன. அந்த வகையில் முன்பள்ளி ஆசிரியர்களும் பெற்றோர்களும் இவ்விடயத்தில் போதிய விழிப்புணர்வைக் கொண்டிருக்க வேண்டும்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் இவ்வாறு அறிவுரை வழங்கினார்.

கடந்த வெள்ளிக்கிழமை உரும்பிராய் செல்வபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் அப்பிரதேசத்தை சேர்ந்த 50 க்கு மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமான முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது.

பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ நிகழ்ச்சி திட்ட உதவியாளர் ப. பிறேம்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர், உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஆரம்பகாலத்தில் பிள்ளையை ஆரம்பப் பாடசாலைக்கு அனுப்புதல் என்ற நிலை இருந்தது. அங்கு ஒரு குறித்த திட்டமோ மற்றும் ஒழுங்கமைப்போ இன்றி தனிப்பட்ட கருத்துக்களுக்கு இடமளிக்கப் பட்டது. இதனால் பல சிறார்கள் பல்வேறு உளப்பாதிப்புகளுக்கு உள்ளானமை அறியப்பட்டுள்ளது. அதன் பிரதிபலிப்புக்கள் இன்றைய சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வெளிப்படுகிறது. ஆனால் இன்று முன்பள்ளி கல்வி பல்வேறு விரிவாக்கம் பெற்று எல்லா இடங்களுக்கும் கல்வியியலாளர், உளவியலாளர்களின் திட்டமிடலில் சிறந்த உத்திகள் கையாளப் படுவது வரவேற்பதற்குரியதாக உள்ளது.

இருந்த போதிலும் எமது பிரதேசத்தில் ஏனைய நாடுகளின் தரத்திற்கு உயர பல படிகள் தாண்ட வேண்டியள்ளது.

மேலும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கென ஒரு சேவை முறை கொண்டு வரப்பட்டு அனைவருக்கும் உரிய பயிற்சி நெறியை வழங்க ஒரு சிறப்பான ஒழுங்கமைப்பு ஏற்படுத்த வேண்டும். [illegible] தொழில்சார் நிலை[illegible] மூலம் மதிப்பையும் அந்தஸ்த்தையும் உயர்த்தலாம்.

இதன் மூலம் மேலும் உயரிய சேவையை அவர்களிடமிருந்து பெற்று பல ஏழைச் சிறார்களின் எதிர்காலத்தை மேன்மையடையச் செய்யலாம்.

எல்லாப் பெற்றோர்களினம் தமது பிள்ளைகளை முன்பள்ளிக்கு அனுப்புவதன் மூலம் பாடசாலை கல்வி பிரவேசத்தை இலகுவானதாக்கலாம்,

நேரத்தை கடைப்பிடித்தல், இயற்கை கடன்கள் ஒழுங்கமைப்பு, நற்பழக்க வழக்கங்கள் ஏற்பட வழிவகுக்கப்ப டுகிறது.

எனவே முன்பிள்ளைப் பருவத்தில் பெற்றோரா அல்லது முன்பள்ளி ஆசிரியரா அதிக பங்கு வகிக்க வேண்டும் என்ற மனப் பாங்கை தவிர்த்து இருவரும் இணைந்து செயற்படுவதன் மூலம் முன்பிள்ளைப் பருவ வளர்ச்சியில் சிறப்பான நிலையை எய்தலாம்-என்றார்.

இந் நிகழ்வில் யாழ்.இந் துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் மற்றும் [illegible] அலுவலர் உட்பட பலர் கலந்து [illegible] (202-72)

## ஆயுள்வேத உதவியாளர் நியமனமிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ்.மாவட்டத்தில் ஆயுள்சேத உதவியாளர் 8 பேர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியை அடுத்தே அந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என தெரிவித்தனர். (202)

## பாம்பு கடித்து வயோதிப மாது உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்,செப்.15

நித்திரையில் இருந்தவேளை பாம்பு கடித்து வயோதிப மாது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை தவசிக்குளம், கொடிகாமத்தில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் இராசலிங்கம் பிலோமினா (வயது 68) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவானுக்கு அறிவித்ததையடுத்து அவர் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



இசையாய் ஒலித்த எம் நண்பன்
நாகசுர வித்துவான், கலாபூஷணம்
**வி.கே.கானமூர்த்தி** அவர்களின்
பிரிவால் வாடும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அவரது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

**நா.திருநாவுக்கரசு**
(துரை,J.P.குடும்பம்),
மூளாய்.

வாரிசீமா வீதி,
கணேஸ்வரம்,
அளவெட்டி.

(78455)

## சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தலப் பெருந்திருவிழா

குருநகர், செப்.15

சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தலப் பெருந்திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இவ்விழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின.

நவநாள் வழிபாடுகள் தினமும் பி.ப. 3.45 மணிக்கு திருச்செபமாலை மற்றும் திருப்பலியுடன் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடும் தொடர்ந்து நற்கருணை பவனியும் நற்கருணை ஆசீரும் இடம்பெறவுள்ளன. (51)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி **மயில்வாகனம் இரத்தினம்மா**

தோற்றம்: 24.07.1922 மறைவு: 16.08.2008

திதி: பூரணை (15.09.2008)

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்தும், கடிதம், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மரணச் சடங்கிலும் கலந்து கொண்டு பல வகைகளிலும் உதவிகள் வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், இன்று *(15.09.2008)* திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.

(78461)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1019 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 05 06 08 30

12-09-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500020768 - 500042133

ஜக்பொட் பரிசு ரூபா. 3,028,600/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 232,331 | 20/- | 4,646,620/- |
| 2 இலக்கங்கள் | 21,270 | 40/- | 850,800/- |
| 1 இல. + லக்கினம் | 21,103 | 60/- | 1,266,180/- |
| 2 இல. + லக்கினம் | 1,972 | 200/- | 394,400/- |
| 3 இலக்கங்கள் | 572 | 1000/- | 572,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,028,600/- | 3,028,600/- |
| மொத்தம் | | | 11,708,600/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 277,311 | | 12,208,600/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

தொடர் இலக்கம் 400021293 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 செப்டம்பர் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.


அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 500029832-7-45 |
| மாத்தளை | 500027740-0-32 |
| குருநாகல் | 500028348-4-19 |
| அம்பாறை | 500030375-2-17 |
| கம்பஹா | 500021010-5-12 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர் **சங்கரப்பிள்ளை லோகசுந்தரம்**

தோற்றம்: 22.02.1937 மறைவு: 16.08.2008

மாதம் ஒன்று ஆனதுவோ
ஐயா! உமைப்பிரிந்து வாடுகின்றோம் நாமே
எமை விட்டு எங்கேதான் ஓடிச் சென்றீரோ?
பொல்லாத கொடும் நோய்தான்
உமைக் கொண்டு சென்றதையா!
வேதனையால் நீர் வாடி துயரம்தான் கொண்டாலும்
இன் சொல்லால் நீர் பேசி எம்துயர்தான் துடைத்தீரே
உன் பிரிவால் வாடிடும் எம் குரல்தான் கேட்கலையா?
இறைவனடி சேர்ந்திடவே உறுதிமொழி கொண்டீரோ
படித்தறிவால் பண்பாளனாய்
பட்டறிவால் எளிமையாளனாய் வாழ்ந்திட்ட
உமைக் கவிதை பாடிட எம்மிடத்தில் வார்த்தையில்லை.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

ரகுபவன் (மகன்- கனடா)
416- 2999430,
சுவர்ணா (மகள்- சுவிஸ்)
0041443221159.

*அன்னாரின் பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

(78459)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி **பிலோமினா வின்சன் டீ போல் (வேவி)**

அன்னையின் மடியில்: 24.08.1940 ஆண்டவன் அடியில்: 17.08.2008

**காலன் உங்களை**
**கவர்ந்து சென்றதால்**
**கலங்கித் துடிக்கின்றோம்**
**கண்ணீர் வடிக்கின்றோம்**
**கர்த்தர் அவர் காலடியில்**
**கனிவுடன் நீர் இளைப்பாற- எம் செபங்களை**
**காணிக்கை ஆக்குகின்றோம்.**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா வின்சன் டீ போல் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தவேளையில் சிகிச்சை அளித்த பருத்தித்துறை மத்திய மருந்தகம், மந்திகை ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் மரணச்செய்தி கேட்டு இல்லம் வந்த அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் அன்பு உள்ளங்களுக்கும், உள்ளூர், வெளியூரிலிருந்து தந்திகள், தபால்கள், தொலைபேசிகள், பத்திரிகை கண்ணீர் அஞ்சலிகள் மூலமாக அனுதாபங்களைப் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் மலர்வளையம் சாத்தி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய அனைத்து உள் ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (16.09.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தூய தோமையார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''றோஸ் கோட்''
[illegible] பருத்தித்துறை. தொ.பே.:0212263129.

**குடும்பத்தினர்.**

(78437)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளங்கள் போதியளவு இல்லாதபோதும் சாதிக்க வேண்டும் என்ற அவா வெற்றியைத் தந்தது

## தேசியமட்ட சம்பியன் நிலைபெற்றது குறித்துப் பெருமிதமடைகிறார் அன்ரனீஸ் அதிபர்



யாழ்ப்பாணம், செப்.15

வளங்கள் போதியளவுஇல்லாதபோதும் சாதிக்க வேண்டும் என்ற அவா இன்று எமது கல்லூரியை தேசிய மட்ட சம்பியனாக உயர்த்தியுள்ளது.

இப்படிப் பெருமிதமடைகின்றார் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஜே.ஏ. யேசுதாஸ்.

தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் சம்பியனாகியுள்ள இக் கல்லூரியின் அணியினர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் திரும்பினர். அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது.

தேசிய மட்ட சம்பியனாகி சாதனை படைத்தமை தொடர்பாக அவர் வழங்கிய செவ்வி வருமாறு:-

கே.: நீங்கள் பெற்றிருக்கும் தேசிய மட்ட வெற்றி குறித்து உங்கள் மனநிலை எவ்வாறு இருக்கின்றது?

ப.: 'ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்'. இதே மனநிலைதான் தற்போது எனக்கும். இவ்வெற்றியால் மட்டற்ற மகிழ்ச்சி அடைக் கிறேன்.

யாழ்ப்பாணத்தின் பின்தங்கிய பிரதேசமாக இன்று அடையாளப்படுத்தப்படும் ஊர்காவற்றுறையில் புனித அந்தோனியார் கல்லூரி தேசிய மட்டம் வரை தன் பெயரை பதித்து சாதனை படைத்திருப்பதை எண்ணி பெருமைப்படாமல் இருக்க முடியுமா? இவ்வெற்றியை மாணவர்களின் முயற்சிக்கும் அயராத பயிற்சிக்கும் கல்லூரி வளர்ச்சிக்கும் கிடைத்த பெரும் பேறாக கருதுகிறேன்.

கே.: சாதனை படைத்த மாணவர்களை பற்றி ஓரிரு வார்த்தைகள் கூறமுடியுமா?

**சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தினார்கள்**

ப. இச் சாதனையாளர்கள் நவீன வசதி வாய்ப்புக்கள் நிறைந்த பாடசாலையில் இருந்தோ அல்லது வளங்கள் மலிந்த பாடசாலையில் இருந்தோ உருவாக்கப்படவில்லை. சாதாரணமாக அடிப்படை வளங்கள் மாத்திரம் கொண்ட ஒரு பாடசாலையில் இருந்துதான் உருவாகி இருக்கிறார்கள்.

சந்தர்ப்பங்களை சரியாகவும், முறையாகவும் பயன்படுத்தினார்கள். இன்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். வெற்றிபெற வேண்டும் என்ற வேட்கையோடு கடந்த ஆண்டும் களத்தில் குதித்த இவர்கள் விதிவசத்தால் வெற்றிக்கனியை எட்ட முடியாது ஏமாற்றம் அடைந்தனர்.

பட்ட அனுபவத்தைப் பாடமாகவும் ஏமாற்றத்தைச் சவாலாகவும் எடுத்துக் கொண்ட இவர்கள் தம்மை முழுமையாகத் தயார்ப்படுத்தி இவ்வாண்டு வெற்றி பெற்றே தீருவோம் என்ற வேணவாவோடு தேசியம் வரை தொடர்ச்சியாக முன்னேறினர். வெற்றியும் கண்டனர். உண்மையில் இவர்கள் சாதிக்கப்பிறந்த சரித்திர நாயகர்கள்.

கே.: உடற்பயிற்சி போட்டியில் பெற்றுக் கொண்ட இவ் வெற்றி தங்கள் பாடசாலை வரலாற்றில் முதல் வெற்றி என எண்ணுகின்றோம். இது பற்றி உங்கள் கருத்து?

**இரண்டாம் இடம் பெற்றமை வெற்றிக்கு ஊக்கமளித்தது**

ப.: பல வருடங்களாக உடற்பயிற்சிப் போட்டியில் தொடர்ச்சியாக எமது கல்லூரி பங்கெடுத்து வந்துள்ளது. 2005 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் 2 ஆவது இடத்தைப் பெற்று எமக்கென்ற ஒரு பதி வினை ஏற்படுத்தினோம். அதன் அடிச்சுவட்டில் உறுதியாக முன்னேறி இன்று அகில இலங்கையில் முதலாவது நிலைக்கு வந்துள்ளோம்.

இவ்வெற்றி எமது கல்லூரி உடற்பயிற்சி வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஒரு வெற்றியாகும்.

கே.: கல்வியையும் விளையாட்டையும் இரு கண்களாகக் கொண்ட உங்கள் பாடசாலையின் பெறுமதி மிக்க இவ் வெற்றி எதிர்கால வளர்ச்சிக்கு எவ்வகையில் உதவப் போகின்றது?

ப.: இன்று ஏட்டுக் கல்வியை விட செயற்பாட்டுக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. எவ்வளவு படித்திருக்கிறான் என்பதைவிட எவ்வளவு திறமைகள் உண்டு என்பதே இன்று பெரும் கேள்வியாக எழுகின்றது.

2005 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட தேசிய மட்ட 2 ஆவது நிலை சான்றிதழால் எமது கல்லூரியில் பலர் பல்கலைக்கழகத்திலும், கல்வியியற் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இப்பொழுது பெற்றிருக்கும் இவ்வெற்றி எதிர்காலத்தில் பலருக்கு பலவிதமான உயர்கல்வி வாய்ப்புகளை சுலபமாக வழங்



வெற்றிவாகை சூடிய அணியினருடன் அதிபரும் பயிற்றுநர்களும்

கப் போகின்றது என்றால் அது மிகையாகாது. இது மட்டுமன்றி உயர் நிறுவனங்களில் வேலைவாய்ப்பிற்கும் இவ்வெற்றி வாய்ப்பாக உள்ளது.

**விடாமுயற்சியே வெற்றிக்குக் காரணம்**

கே.:சாதனையாளரின் சாதனையை உதாரணம் ஆக்கி மாணவ சமூகத்திற்கு நீங்கள் கூறவிளைவது என்ன?

ப.: குறைந்தஎண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட இக் கல்லூரி அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை பெற்றிருப்பது என்றால் அது அவர்களின் முயற்சியாலும் தொடர் பயிற்சியாலும் மனஎழுச்சியாலுமே கைகூடி இருக்கின்றது. இதே வழிமுறையை ஒவ்வொரு மாணவனும் கல்வியிலும் இணைப்பாட விதானங்களிலும் சமூக, சமய செயற்பாடுகளிலும் பின்பற்றினால் நிச்சயம் உயர்ந்த நிலைக்கு வரலாம்.

இவ்வெற்றி பல தடைகளையும் ஏமாற்றல்களையும் போக்குவரத்து இடர்பாடுகளையும் கடந்து இன்று கைகூடி இருக்கிறது. எனவே தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் எமது மாணவர்கள் செயற்பட்டது போல அனைத்து மாணவர்களும் சவால்களை சாதனைக்குரிய சந்தர்ப்பங்களாக மாற்றினால் வெற்றி நம்மை தேடிவரும். இந்த அறிவுரைகளை நான் கண்ட அனுபவத்திலிருந்து அறிவுரையாக வழங்க விரும்புகிறேன்.

கே.:குறைந்த தொகை மாணவர்களுடைய பாடசாலையாகவும் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள பாடசாலையாகவும் வளர்ச்சி வருவாய்க்குரிய வழிவகைகள் குறைவான பாடசாலையாகவும் விளங்கும் உங்கள் பாடசாலை இப் பெரும் செலவீனத்தை எவ்வாறு எதிர் கொண்டது.

**சமூக சேவை அமைச்சின் உதவிக்கும் நன்றி**

ப.: காசு இல்லாதவனுக்கு கனவுகள் கோடி என்பார்கள். வளப்பற்றாக் குறை பல இருந்த போதிலும் சாதிக்க வேண்டும் என்ற அவா அவற்றை மிஞ்சி மேலோங்கி நின்றது. வசதி வாய்ப்புகள் பல உள்ளபாடசாலைகளிலேயே எதிர்கொள்ள முடியாத இப் பெரும் செலவீனத்தை எதிர்கொள்வதற்கு வழிசமைத்துக் கொடுத் தது சமூக சேவைகள் அமைச்சாகும். யாழ்.மாவட்டத்திலிருந்து மாகாண, தேசிய நிலைப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் ஒட்டு மொத்த குரலாக பயண, உணவு செலவீனங்களை பொறுப்பெடுத்து உதவுமாறு சமூகசேவைகள் அமைச்சிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க நீண்ட நாள்களைக் கொண்ட இப்பயணத்தின் மேற்படி செலவீனங்களை ஏற்று எமக்கு பக்கபலமாக இருந்த சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம். ✱

**செவ்வி கண்டவர்: லோகவர்ணன்**

# பல்கலைக்கழக தடகளப் போட்டி: கலைப்பீடம் முதலிடம் பெற்றது

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.பல்கலைக் கழக பீடங்களுக்கு இடையில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் கலைப் பீடம் முதலிடம் பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பீடங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இடத்தை கலைப்பீடமும் இரணடாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் மூன்றாம் இடத்தை விஞ்ஞான பீடமும் நான்காம் இடத்தை மருத்துவ பீடமும் ஐந்தாம் இடத்தை விவசாய பீடமும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டிகளில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பி.நேசரூபன் 800 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த எம். மொஷாந்தி 400 மீற்றர் ஓட்டப்போட்டியிலும் புதிய சாதனைகளைப் படைத்துள்ளனர்.

ஆண்கள் பிரிவில் பி.நேசரூபன் சிறந்த தடகள வீரராகவும் என். றுசாந்தன் சிறந்த கள விரனாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்கள் பிரிவில் எம். மொஷாந்தி சிறந்த தடவீராங்கனையாவும் எஸ். சாந்தினி சிறந்த கள வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.எம். மொஷாந்தி மேற்படி போட்டியில் சிறந்த வீரருக்கான சிறப்புப் பரிசிலையும் பெற்றுக்கொண்டார் ✱

# குண்டெறிதலில் தங்கம் வென்று தேசிய மட்டத்துக்கு பானுப்பிரியன் தெரிவு



யாழ்ப்பாணம், செப்.15

மாகாண மட்ட தடகளப் போட்டிகளில் குண்டெறிதல் போட்டியில் தங்கம் வென்ற யாழ். பரியோவான் கல்லூரி மாண வன் புவனேந்திரன் பானுப்பிரியன் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

வவுனியாவில் கடந்த வாரம் நடைபெற்ற மாகாண மட்ட தடகள நிகழ்வில் யாழ். பரியோவான் கல்லூரி மாண வன் செல்வன் பு.பானுப்பிரியன் 17 வயதுப் பிரிவில் குண்டெறிதல் போட்டியில் தங்கம் வென்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகி உள்ளார்.

இவர் கல்லூரியின் உப அதிபர் எஸ். அன்டனிப்பிள்ளையின் நேரடி வழிகாட்டலிலும் தடகளப் பயிற்சி ஆசிரியர் எஸ்.றமணனின் களப் பயிற்சியின் கீழும் தடகளப் பயிற்சிகள் பெற்று வருகின்றார்.

கல்லூரியின் கரபந்தாட்ட அணி, துடுப் பந்தாட்ட அணியிலும் இவர் இடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சியில் மென்பந்தாட்டம்; திருநாவலூர் கேடயம் சுவீகரித்தது

மந்திகை, செப்.15

வடமராட்சி மாலு சந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்



யாழ்ப்பாணம் லக்கி முன்பள்ளி விளையாட்டுப் போட்டியின் போது முன்பள்ளி சிறார்கள் சத்தியப்பிரமாணம் எடுப்பதையும் அருகில் முன்பள்ளி ஆசிரியை மா.இந்துமதி நிற்பதையும் படத்தில் காணலாம். (21)

போட்டியில் பருத்தித்துறை திருநாவலூர் விளையாட்டுக்கழகம் சம்பியனானது. கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

5 ஓவர்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் கரவெட்டி மனோகரா விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இது கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதியது.

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியிலே அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துமோதியது.

வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இது அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதியது.

சவால்கிண்ணப் போட்டியில் மாலு சந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இது கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதியது. (1-218)

# உடுவில் கோட்ட உதைபந்தாட்டம்: இன்று ஸ்கந்தாவில் ஆரம்பமாகியது

வலி.வடக்கு, செப்.15

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று திங்கடகிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டிகளில் 13 வயதுப் பிரிவில் எட்டு பாடசாலை அணிகள் இரண்டு பிரிவுகளாகவும்-

16 வயதுப் பிரிவில் ஒன்பது பாடசாலை அணிகள் இரண்டு பிரிவுகளாகவும் -

18 வயதுப் பிரிவில் ஆறு பாடசாலைகள் இரண்டு பிரிவுகளாகவும் மோதவுள்ளன-

போட்டிகள் யாவும் லீக் முறையில் இடம்பெறவுள்ளன. போட்டிகளுக்கான ஏற்பாடுகளை உடுவில் கல்விக்கோட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகரும் விளையாட் [illegible] க.சிவராசா மேற் [illegible]

இன்றைய ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**13 வயதுப் பிரிவு**

✱ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

✱ இணுவில் இந்துக் கல்லூரி எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

✱ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் ஏழாலை மகா வித்தியாலயம்.

✱ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம். (1-86)

**விளையாட்டு அரங்குகளில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





துவாரகன் எழுதிய 'மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்' என்னும் கவிதை நூலின் வெளியீட்டு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள். யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நூலின் முதல் பிரதியை கோட்டக்கல்வி அதிகாரி த.தவேந்திரராசாவிடம் வழங்குவதையும் நூலாசிரியர் நடுவில் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி வாழ்த்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் இரு படங்களிலும் காணலாம். (70)

# தாம் ஆட்சிக்கு வந்தால் தமிழீழம் மலர உதவி வழங்கப்படும் என்கிறார் ராமதாஸ்

சென்னை, செப்.15

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சிறிலங்காவில் தமிழ் ஈழம் மலர உதவுவோம்" என்று பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பா.ம.க.சார்பில் சென்னை வியாசர்பாடியில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'பா.ம.க. 7 ஆண்டுகளாக பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக செயல்பட்டு வருகிறது. எங்களைப் போல் எந்த கட்சியும் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக செயல்பட்டது இல்லை.

தி.மு.க.ஆட்சியின் தவறுகளை சுட்டிக்காட்டி வருகிறோம். அதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வன்முறை கலாசாரம், கட் அவுட் கலாசாரம், காலில் விழும் கலாசாரம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தவர் கருணாநிதி தான். 2011 இல் பா.ம.க.ஆட்சிக்கு வந்தால் ஒரு துளி மதுகூட இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம். - என்றார்.

சிறிலங்காவில் ஈழத்தமிழர்களை இராணுவம் அழித்து வருகிறது. அந்தத் தமிழர்களை காக்க வேண்டாமா? நம் கண் முன்னே எமது இனம் அழிகிறது. தமிழக மீன வர்கள் சுடப்படுகிறார்கள். அவர்களை காக்க வேண்டாமா? பா.ம.க. ஆட்சிக்கு வந்தால் தமிழ் ஈழம் மலர்வதற்கு உதவுவோம்.

சிறிலங்கத் தமிழர்களுக்கும், தங்களுக்கும் தொப்புள் கொடி உறவு இருப்பதாக கருணாநிதி அடிக்கடி கூறுகிறார். ஆனால் சிறிலங்கத் தமிழர்களுக்கு அவர் குரல் கொடுப்பதில்லை - என்றும் டாக்டர் ராமதாஸ் சொன்னார். (அ)

# மோட்டார் சைக்கிள் புத்தகமும், சாரதி அனுமதிப்பத்திரமும் யாழ்.திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், செப்.15

புதிய மோட்டார் சைக்கிள் புத்தகம், சாரதி அனுமதிப்பத்திரங்கள் என்பவை யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கீழ் குறிப்பிடப்படும் பெயர் விவரங்களுக்குரியவர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

புதிய மோட்டார் சைக்கிள் புத்தகம், சாரதி அனுமதிப் புத்தகங்களுக்குரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:

### சாரதி அனுமதிப் பத்திரம்

அற்புதராசா பரமேஸ்வரன் (அரியாலை), அசோகலிங்கம் விசுவலிங்கம் (பஸார் வீதி, யாழ்ப்பாணம்), மரியாம்பிள்ளை மரியதயாளன் (கொழும்புத்துறை), ஜீவரத்தினம் லக்ஸ்மன் (திருநெல்வேலி மேற்கு), சிவக்கொழுந்து லம்போதரன் (சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்) சவரிமுத்து ஸ்ரனிஸ்லஸ் (மடத்தடி, யாழ்ப்பாணம்), மாணிக்கராசா ஜெயராசா (கொட்டடி, யாழ்ப்பாணம்), திருமதி மேகலா ஜெயவிந்தன் (உலகுடையார் வீதி, யாழ்ப்பாணம்), ஆரணி தம்பிராஜா (கல்வியங்காடு), குமாரசாமி ரவிக்குமார் (ஏ.வி.வீதி, யாழ்ப்பாணம்), கந்தையா கேதீசன் (கொட்டடி, யாழ்ப்பாணம்)

### வாகனப் பதிவுச் சான்றிதழ்

எம்.தர்மேந்திரா (112 - 3756), எஸ்.சிறிகாந்தன் (NPGQ - 4594), என்.சுகந்தினி (NPJT - 2718), எஸ்.திருச்செல்வம் (NPHH - 8987), எஸ்.தர்ஷன்நிக்கலன் (NPMD - 3220), எஸ்.சுமித்திரா (NPJM - 0996), எஸ்.யோகேஸ்வரி (17-1227), டபிள்யூ.தியாகராஜா (500-7770), எஸ்.சிவலிங்கம் (157 - 2956), எம்.அன்ரன் (146 - 4503), கே.சிறிஸ்கந்தகுமார் (NPTH - 6978), பி.மோகனராசன் (500 - 5901), எஸ்.பொன்னம்பலம் (500 - 6251), பி.கணபதிப்பிள்ளை (NPMG - 5935), எஸ்.வசந்தகுமார் (NPGO - 6380), எம்.றொசான் (139 - 4319), ஜே.பிரசன்னா (NPJY - 8638), வி.சதானந்தன் (101 SRI 6426), ரி.சசிகரன் (NPGO - 9764), எம்.ஞானச்சந்திரன் (NPMF - 6397), எஸ்.சுரேந்தர் (NPJB - 1041), (NPHS - 9723), சி.இராசரத்தினம் (500-0020), கே.தர்மராசா (500-0160), எஸ்.தயாளினி (NPHH - 1684), என்.சுப்பிரமணியம் (86 SRI 5689), எல்.கிறிஸ்தோப் (107 SRI 0296), பி.பிரேமதாசன் (NPJK - 9907), கே.இராசலிங்கம் (146-6189), எஸ்.மலர்வண்ணன் (NPGG - 9826)

(202)

## சமுர்த்தி நிவாரண வழங்கற் கட்டளைகள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.15

ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களின் சமுர்த்தி நிவாரண விநியோகத்திற்குரிய வழங்கற் கட்டளைகள் இன்று வழங்கப்படவுள்ளன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கற் கட்டளைகளை மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் இன்று பெற்றுக்கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலையில் கணித பாட ஆசிரியையாகக் கடமையாற்றி யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பா சாலைக்கு கடமை நிறைவேற்று அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற **திருமதி நவலட்சுமி சந்திரகுமார்** அவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை மானிப்பாய். அதிபர், ஆசிரியர்கள்.

**கண்ணீர் அஞ்சலி**



மூளாயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரும் நாதஸ்வர வித்தையால் உலகப்புகழ் பெற்றவருமான நாதஸ்வர வித்துவான் **V.K.கானமூர்த்தி** அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி ர.சோதிலிங்கமும் பிள்ளைகளும்** (ஓய்வுபெற்ற அதிபர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்).

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

மண்ணில் 16 . 08 . 2008



விண்ணில் 01 . 05 . 1940

**திருமதி சுப்பிரமணியம் நகுலாம்பிகை**
(விடத்தற்பளை)

சீரோடு மண்ணில் வாழ்ந்து - எம்
சிறப்புக்கு வித்தாய் நின்று
பாரொளிர் சுடராய் ஆகி - இன்று
பரமன் தாள் சேர்ந்த தங்கள் நினைவுகளுடன்

உசன் தெற்கு, மிருசுவில். (78391) **குடும்பத்தினர்.**

**தேவை**

ஓலைச் சார்வு தேவை.
**அஞ்சனா தொழிலகம்**
துரை வீதி, இணுவில் (சி/554636)

**விற்பனைக்கு**

கடையில் முகப்புத் தோற்றத்திற்கான கதவுடன் கூடிய கண்ணாடி சோக்கேஸ் விற்பனைக்குண்டு.
தொடர்பிற்கு: **சி.அருமைத்துரை**
குமரகோட்டம், கோண்டாவில் வடக்கு.

**வீணைகள் விற்பனைக்கு**

தஞ்சாவூர் வீணை - 18, 500, மரகத வீணை - 20,000, மரகத வீணை (அலங்காரம்) - 22, 000, தம்பூரா - 13, 500
தொடர்பு: **K.P.பாலகிருஷ்ணன்**
692 K.K.S.வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். T.P. 222 2940 (78438)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 15.09.2008 திங்கள் விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* **ராஜீவ்** - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* **மதுரா** - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* **சிற்றி பாம் றேடேர்ஸ்** - கல்வியங்காடு.
* **திருமகள் களஞ்சியம்** - சிவலிங்கப் புளியடி.
* [illegible]

(78444)

**கண்ணீர் அஞ்சலி**

மன்ற அங்கத்தவர் திருமதி ம.கனகாம்பிகை அவர்களின் கணவர் **வேலுப்பிள்ளை மகேந்திரன்** 10.09.2008 அன்று காலமானார். அன்னாரின் மறைவிற்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.** (சி/554644)

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆலய ஆஸ்த்தான நாதஸ்வர வித்துவான் **K.பாலமுருகனின்** அன்பு மாமனார் **கலாபூஷணம் V.K.கானமூர்த்தி** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.அத்தியடி, பிள்ளையார் கோயில். (சி/554653) **நிர்வாகத்தினர்.**

**சீட்டிழுப்பு முடிவு**

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச் சங்கத்தினால் 05.09.2006ஆம் திகதி நடத்தப்படவிருந்த அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு 12.09.2008ஆம் திகதி நடத்தப்பட்டது. அதன் முடிவுகள்.

1ஆம் பரிசு இல - 06000
2ஆம் பரிசு இல - 01231
3ஆம் பரிசு இல - 02293

**ஆறுதல் பரிசில்கள் (15)**

| | | | |
|---|---|---|---|
| 1)04869 | 5)00781 | 9)02384 | 13)01549 |
| 2)03634 | 6)02773 | 10)01991 | 14)09723 |
| 3)08898 | 7)04683 | 11)06173 | 15)08571 |
| 4)01171 | 8)06674 | 12)01641 | |

குறிப்பு: 30.09.2008ஆம் திகதிக்கு முன் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தலைவர்
**பணியாளர் நலன்புரிச் சங்கம்.**
(சி/554645)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கைத் தமிழ் மக்களுக்கான தமிழகத் தலைவர்களின் பணி

வவுனியாவில் படைத் தலைமையகம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாயன்று நடத்திய அதிரடிப் பாய்ச்சல் தாக்குதல் நடவடிக்கையின்போது, அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த இந்திய விமானப் படையின் இரு சார்ஜண்டுகள் காயமடைந்த விவகாரம், எதிர்பார்த்தபடியே தமிழக அரசியலில் ஒரு பெரும் சூட்டைக் கிளப்பியே இருக்கின்றது.

இந்தியா, இலங்கைக்கு வழங்கிய 'இந்திரா' ரக 'ராடர்'களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களே இப்படிக் காயமடைந்தவர்கள் என்று இந்தியத் தூதரகம் சமாளிக்க முற்பட்டாலும் கூட -

புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் இந்தியப் படைகளின் நேரடிப் பங்களிப்புப் பிரசன்னத்தை இச்சம்பவம் அம்பலப்படுத்தியிருக்கின்றது என்றே தமிழகக் கட்சிகள் கருதுகின்றன.

இதுபற்றிய குட்டு அம்பலமானமையை அடுத்துத் தமிழகக் கட்சிகள் தம்பாட்டுக்கு சீறத் தொடங்கியிருக்கின்றன.

தமிழகத்தின் இரு பிரதான கட்சிகளான ஆளும் தி.மு.கவும், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவும் இவ்விடயத்தில் தொடர்ந்து அதீத மௌனம் பேணி, பேசாமல் இருந்து வருகின்றனமையும் தமிழகத்தில் பல்வேறு கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பியிருக்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

"இந்திய அரசு தனது இராணுவத் தரப்பினரையே இந்த யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அனுப்பி வைத்திருக்கின்றது என்றால் இந்திய அரசும் சேர்ந்து குற்றவாளியாகியுள்ளது என்பது அம்பலமாகி விட்டது. இப்படி மறைமுகமாக இலங்கை அரசுக்கு உதவியுள்ள இந்தியாவின் செயல் கண்டிக்கத்தக்கது." - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநிலச் செயலாளர் த.பாண்டியன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தியாவில் தற்போதைய காங்கிரஸ் அரசு மத்தியில் நிலைகொண்டிருப்பதற்குக் கடந்த மாதம் வரை முண்டுகொடுத்து உதவி வந்த இடதுசாரிக் கட்சிகளுள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதானமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு நேரடியாக - இராணுவ ரீதியான - ஆளணி உதவிகளை வழங்கியதன் மூலம் இந்திய அரசு புரிந்திருக்கும் 'குள்ளநரித்தன' செயற்பாடு குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும், நியாயம் கேட்கப்படும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கோடி காட்டியிருக்கின்றார்.

அதேநேரம் இந்தியாவில் மாற்று அரசு அமைக்கக் கூடிய வலுவுடைய பிரதான கட்சி என்று கருதப்படும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் இல. கணேசன் இன்னும் சற்று சூடாக நியாயம் உரைத்திருக்கின்றார்.

"இலங்கையில் ஈழத் தமிழர்கள் தமது வாழ்வுரிமைகளை இழந்து, சம உரிமைகளுக்காக - நியாயம் கேட்டு - போராடி வருகின்றார்கள். இந்நிலையில் இந்தியா ஒன்றில், தமிழர்களுக்கு நேரடியாக உதவ முன்வரவேண்டும்; இப்பிரச்சினை பக்கத்து நாட்டில், பண்பாட்டு ரீதியாகத் தொப்புள் கொடி உறவுகொண்ட ஈழத் தமிழர்கள் சம்பந்தப்பட்டது என்பதால் இந்தியா இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு அங்கு தமிழர்களுக்கு நியாயமான - சமத்துவ - உரிமை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அல்லது, இரு தரப்புகளுக்கும் ஆதரவளிக்காமல் அது நடுநிலையாகச் செயற்படவேண்டும். ஆனால் இந்திய அரசு அப்படி நடக்கவில்லை. இந்திய இராணுவத்தைச் சேர்ந்தவர்களே இப்போது இலங்கையில் காயப்பட்டிருக்கின்றார்கள் என்றால், இந்தியா இலங்கைக்கு இரகசியமாக உதவுகின்றது என்பதே அம்பலமாகியிருக்கிறது. இது நல்லதல்ல." - இப்படி பாரதீய ஜனதா மாநிலத் தலைவர் இல. கணேசன் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏனைய பல இடதுசாரித் தலைவர்களும் மற்றும் வழமைபோல விடுதலைச் சிறுத்தைகளின் திருமாவளவன், மறுமலர்ச்சி தி.மு.கவின் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சியின் டாக்டர் இராமதாஸ், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், புதிய தமிழகக் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி போன்ற பலரும் இவ்விடயத்தை ஒட்டி சீற்றத்துடன் கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள்.

தமிழகத்தின் பல்வேறு தலைவர்களும் தத்தமது கட்சிகளின் சார்பில் இவ்விகாரத்தை ஒட்டி தனித்தனியாக ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், வழிமறிப்புப் போராட்டங்கள், உண்ணாவிரத நிகழ்வுகள் என்று பல எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராகி வருகின்றார்கள்.

உண்மையில் இவ்விடயத்தில் ஈழத்தமிழர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பதுதான் அவர்களின் இலக்கும், நோக்கமுமாக இருக்குமானால்-

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை வைத்துத் தமது சொந்த அரசியலை நடத்துவதும் குறுகிய அரசியல் லாபங்களைத் தேடிக்கொள்வதும் அவர்களது எத்தனமாக இல்லாது இருக்குமானால்-

• இவ்விடயத்திலாவது - ஈழத்தமிழர்களுக்காக - ஒன்றுபட்டுக் குரல் எழுப்பி, ஒரே நோக்கில் ஐக்கியப்பட்டுப் போராடி- ஏதேனும் பயனுள்ளதைச் சாதிக்க அவர்கள் முன்வரவேண்டும்.

செய்வார்களா தமிழக அரசியல் தலைவர்கள்?

ஈழத்தமிழர்கள் ஆவலோடு அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது இதைத்தான்!

## வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில்
# மீளக் குடியமர விரும்புபவர்களின் காணிகளுக்கு சட்டபூர்வ ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்
## யாழ்.சட்ட உதவி நிலையம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.15

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியேற விரும்பும், காணி உறுதி இல்லாத குடும்பங்களுக்கு காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டபூர்வ ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு யாழ்ப்பாணச் சட்ட உதவி நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி நிலையத்தின் இயக்குநரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வலி.வடக்குப் பிரதேச செயலகப் பிரிவின் பத்துக் கிராமங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து, ஒரு தசாப்தத்திற்கு மேலாக யாழ்.குடா நாட்டிலும், வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியைத் தமது வதிவிடமாகக் கொண்டிருந்த இக் குடும்பங்களை, அவர்களது நிலங்களில் மீளக் குடியேற்றும் திட்டத்தின் கீழ் காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான பதிவு நடவடிக்கைகளை வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது.

ஆனால், காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான காணிக் கந்தோரில் பதியப்பட்ட உறுதி, அல்லது அதன் பிரதி அற்ற நிலையில், மீளக் குடியேறுவதற்கான பதிவினைச் செய்ய முடியாத நிலையில் பல குடும்பங்கள் இருப்பதாக நிர்வாக வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியான குடும்பங்களுக்கு காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டபூர்வ ஆவணங்களை யாழ்ப்பாணச் சட்ட உதவி நிலையம் பெற்றுக் கொடுக்கவுள்ளது.

காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டபூர்வ ஆவணங்களை பெறவேண்டியிருப்பவர், பின்வரும் விவரங்களை முற்கூட்டியே சேகரித்து, சட்ட உதவிச் செயலமர்வுகள் நடைபெறும்போது கொண்டுவர வேண்டும்.

இந்தச் செயலமர்வுகள் நடைபெறும் தினம், இடம், நேரம் என்பவைகள் வலி.வடக்கு பிரதேச செயலரால் கிராம சேவையாளரூடாக அறியக் கொடுக்கப்படும்.

* காணி தொடர்பான ஒற்றி, ஈடு, குத்தகை, வாடகைப் பொருத்தம் போன்ற பிற உறுதிகள் இருப்பின், அவைகள்;
* காணியின் உரித்தாளிகள் இறந்திருந்தால், அவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரம், திருமண அத்தாட்சிப் பத்திரம், அவர்களின் வாரிசுகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;
* தேவைப்படும் காணியின் பெயர், விஸ்தீரணம், வம்சாவளி போன்ற தகவல்களை அளிக்கக் கூடிய முதியோர்கள்;
* குறிப்பிட்ட காணியானது பெரியதொரு காணியைப் பிரித்த பகுதியாக இருந்தால், பெரிய காணியிலிருந்து பிரித்து வழங்கப்பட்ட அயல் காணிகளின் உறுதிகள், நில அளவையாளர் வரைந்திருந்த படங்கள்.

இது தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமாயின், யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத்தெரு, இல 56 இல் அமைந்துள்ள யாழ்பாணச் சட்ட உதவி நிலையத்துடன் நேரடியாகவோ, அல்லது 021 222 8989 தொலைபேசி மூலமோ சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் தொடர்புகொள்ள முடியும் அல்லது jaffnalegal@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ள முடியும்-என்றார். (202)

# தாக்கங்களுக்குள்ளாகும் பொதுமக்களை பாதுகாக்க இருதரப்பினரும் தங்களால் ஆனதைச் செய்ய வேண்டும்
## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வற்புறுத்துகிறது

யாழ்ப்பாணம், செப்.15

தொடர்ந்து கொண்டிருக்கும் மோதலின் தாக்கங்களில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு தங்களால் ஆனதைச் செய்து கொடுக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைக் குழு முரண்பாட்டிலுள்ள இரு தரப்பினரையும் கோருகின்றது.

இவ்வாறு குழுவின் இலங்கைக்கான தலைவர் ரூன்வன்டென் கோவ் கோரியுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழு விடுத்த அறிக்கையொன்றிலேயே இவ்விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

மனித நேய உதவி தேவைப்படுவோருக்கு எம்மாலானவற்றை செய்து கொடுக்கவும் அவர்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம் என்றும் வன்டென் கோவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழு 2008 ஆம் ஆண்டுக்குரிய இலங்கைக்கான நிதி ஒதுக்கீடான 27 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்தே வன்னிக்கான நிவாரணச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பொதுமக்களைப் பாதிக்கின்ற, சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல் தொடர்பான விடயங்களை குழு நாடு முழுவதும் கண்காணித்து வருகின்றது. காணமல்போதல், கைதுகள், கொலை, துன்புறுத்தல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து தொடர்புடைய தரப்பினருடன், இரகசியத் தன்மையுடன் எமது குழு பேசி வருகின்றது. முறையிட்டவர்களுக்கு ஆபத்தைக் கொண்டு வராத வகையில் பேசி வருகின்றது-என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

# யாழ்.மாவட்ட கலை இலக்கிய பெருவிழா எதிர்வரும் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவை நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட கலாசாரப் பேரவையால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற கூத்து நிகழ்வு மற்றும் வலய மட்டத்தில் வெற்றி பெற்ற கூத்து நிகழ்வு என்பன இவ்விழாவில் மேடையேற்றப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் தேசிய கலை இலக்கிய விழா-2007, அரச கலை விழா-2007 ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும் தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கும் இந் நிகழ்வில் வைத்து சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (202)

# வடமராட்சி கல்வி வலயத்தில் சிறுவர் தினத்தையொட்டி போட்டிகள்

வடமராட்சி, செப்.15

சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் தரம் 6 தொடக்கம் 13 வரையிலான மாணவர்களிடையே நான்கு பிரிவுகளாக நடத்தப்படும். போட்டிகளுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலம் ஆகிய நிலையங்களில் நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவில் இருந்தும் முதல் 18 இடங்களை எழுத்துப் பரீட்சை மூலம் பெறும் மாணவர்கள் ஒன்றிணைக் கப்பட்டு மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்கள் மத்தியில் வினாவிடைப் போட்டி நடத்தப்படும்.

இப்போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழும், வெற்றிக் கேடயமும் வழங்கப்படுமென வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்துள்ளார். (202-236)

# உள்ளக இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகர்கள் ஆகியோர் மாவட்ட உள்ளூராட்சி சபைகளிடையே உள்ளக இடமாற்றம் செய் யப்படவுள்ளனர்.

இடமாற்றம் பெற விரும்பும் உத்தியோகத்தர்களின் விவரங்களை ஒரு வாரத் தினுள் அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந் திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் கோரப் பட்டுள்ளது. (202-207)

# கருத்தரங்கு ஒத்திவைப்பு

கோப்பாய், செப்.15

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நாளை மறுதினம் தொடக்கம் 21 ஆம் திகதிவரை நடத்தப்படவிருந்த விசேட கல்வி பற்றிய வழிகாட்டல் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் முதலாம் திகதிவரை இக்கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (202-207)

# சாஸ்திரீய இசையை ஜனரஞ்சகப்படுத்தியவர்

"அமரர் வி.கே.கானமூர்த்தி நாதஸ்வரக் கலையைக் காலங்காலமாக வளர்த்த இசைமரபில் வந்தவர். சாஸ்திரீய சங்கீத்தைப் போற்றிய அதே வேளை, மெல்லிசையைப் பிரபல்யப்படுத்துவதில் அவரும் அவர் சகோதரர் பஞ்சமூர்த்தியும் முன்னின்று உழைத்தவர்கள். இளங்கலைஞர்களாக, இசையை ஜனரஞ்சகப்படுத்தியதில் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு"


நாதஸ்வர வித்துவான் வி.கே. கானமூர்த்தி அவர்களின் மறைவு குறித்து இளங்கலைஞர் மன்ற நிறுவுநர் பொன். சுந்தரலிங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"கானமூர்த்தியின் கவர்ச்சியான தோற்றமும் எல்லோருடனும் சுமுகமாகப் பழகும்பாங்கும் அவருக்கென ஒரு ரசிகர் குழாத்தை உருவாக்கின எனலாம். இக்கலைஞனின் மறைவு ஈழத்து இசைத்துறைக்கு ஒரு பின்னடைவாகும்" என அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 31 | 16.09.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | பிரதமை |
| | பி.ப. 02.14வரை |
| நட்சத்திரம் : | உத்திரட்டாதி |
| | மு.இ. 11.27வரை |
| சுபநேரம் : | 10.33 - 12.03 |
| ராகுகாலம் : | 03.03 - 04.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில்மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் தேர்திருவிழா நேற்று பக்திபூர்மாக இடம்பெற்றது. விநாயகரும், முருகனும் தேரில் வலம் காட்சிகளை படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடம்: இன்றைய நிலைமையை விளக்கி உதயனுக்குக் கிடைத்த விவரங்கள்

**போதனா வைத்தியசாலை ஆய்வுகூட சேவை சீரடைவதற்கு வழிபிறப்பது இனி எப்போது?** - என்ற தலைப்பில் இம் மாதம் 7 ஆம் திகதிய உதயனில் வெளியான கட்டுரை குறித்து ஆய்வு கூடத்தின் தலைமைத் தொழில்நுட்பவியலாளர் அனுப்பிய விளக்கத்தை இங்கு தருகின்றோம்.

நோயாளர்களுக்கு உள்ள கஷ்டங்களைச் சுட்டிக்காட்டி அவர்களுக்கு உரிய வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற சமூக உணர்வுடன் கூடிய பரந்த நோக்குடனேயே அந்தக் கட்டுரை வெளியிடப்பட்டது.

அதிகாரிகளை அல்லது பணியாளர்கள் எவரையும் அவமதிக்கும் எண்ணத்துடன் கட்டுரை பிரசுரிக்கப்படவில்லை.

நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட விளக்கத்தினால் வாசகர்கள், நோயாளர்கள் மத்தியில் நிலவிய சந்தேகங்களும் தப்பெண்ணங்களும் நீங்கும் என நம்பலாம். வளக்குறைவுகள், வசதிக்குறைவுகள் இருந்தாலும் பணியாளர்கள் தம்மால் இயன்றளவுக்கு நோயாளர் நலனில் அக்கறையுடனும் மன உணர்வுடனும் பணியாற்றுகின்றார்கள் என்பது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

அந்த வகையில் 'உதயன்' தனக்குரிய கடமையை செய்திருக்கிறான்.

எமது ஆய்வுகூட சேவை பற்றி தங்கள் பத்திரிகையில் 07.09.2008 அன்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் கட்டுரை சம்பந்தமாகப் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

* இந்த ஆய்வுகூடம் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்காகக் கொழும்பு வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்துடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்களால் அனுப்பப்படும தரக்கட்டுப்பாட்டு பிரிசோதனை மாதிரிகள் இங்கு பரிசோதிக்கப்பட்டு அதன் முடிவுகள் 3 மாதங்களுக்கு ஒரு முறை அறிவிக்கப்பட்டு வருவது வழமை. ஏ-9 வீதி மூடப்பட்ட பின்பு கொழும்பில் இருந்து இப் பரிசோதனை மாதிரிகளை எடுத்து வருவதில் ஏற்பட்ட எங்கள் சக்திக்கப்பாற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக கடந்த ஒன்றரை வருடங்களாக மாத்திரம் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. ஆனால் ஒகஸ்ட் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம்வரை தரக்கட்டுப்பாட்டுப் பரிசோதனை மாதிரிகள் கடந்த வாரம் பல இடர்களுக்கு மத்தியில் எடுத்து வரப்பட்டுள்ளதை அறியத்தருவதோடு பல வருடங்களாக இந்த ஆய்வு கூடம் தரக்கபட்டுப்பாட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* எமது ஆய்வு கூட அறிக்கைகள் குறைந்த பௌதிக தகுதிவாய்ந்த மனித வளங்களுடன் மேற்கொள்ளப்படுகின்றன. வேலைப்பளு காரணமாக சில அறிக்கைகளில் தவறுகள் ஏற்படுவது வழமை. மாறாக இவ்வறிக்கைகள் வைத்திய நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்டு நோயாளர்களுக்குச் சிகிச்சைகள் செவ்வனே வழங்கப்பட்டு வருகின்றன. எனவே இதன் நம்பகத்தன்மை பற்றி இக்கட்டுரை வரைந்தவர் ஐயப்படத் தேவையில்லை. ஏனெனில் இவர் ஒரு வைத்திய நிபுணர் அல்லவென்பது புலனாகிறது.

* நெருப்புக் காய்ச்சலுக்குரிய பரிசோதனையானது 09.09.2008 வரை இவ்வாய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பின்னர் இதற்குத் தேவையான மருந்து கடந்த மாதம் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது. எனவே கடந்த 5 மாதங்களாக இப் பரிசோதனை செய்யப்படவில்லை என்பது சரியான தகவல் அல்ல.

* குருதி உறைதல் பரிசோதனையானது(Prothrombintime)இவ்வாய்வு கூடத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்குத் தேவையான மருந்துகள் சுகாதார அமைச்சினால் உரிய காலத்தில் தருவிப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளினாலும் கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் நாம் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தாலும் இப்பரிசோதனை இயன்றவரை மிகவும் அவசியமான நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு தற்போது ஓரளவு இது சீராக்கம் பெற்றமையை குறிப்பிட விரும்புகின்றேன்.

* அடுத்து தைரெக்சின் பரிசோதனைக்குத் தேவையான மருந்தினைப் பெறுவதற்கு நாம் 2 மாதத்திற்கு முன்பாக கூறுவிலை கோரி கேள்விச் சபையினூடாக (Tender board) கொழும்பிலுள்ள கம்பனி ஒன்றுக்கு வழங்கியிருந்தோம். ஆனால் அவர்கள் உரிய காலத்தில் அவற்றை வழங்கவில்லை. மேலும் அவர்களுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டு கேள்விச் சபையின் விதிகளுக்கமைவாக அடுத்த முயற்சிகளை மேற்கொண்டோம். இறுதியில் றுவிலை சமர்ப்பித்தவர்களிடமிருந்து ந்த 2 மாதகாலமாக இம் மருந்து சமர்ப்பிக்கப்படாததால் புதிய கம்பனி ஒன்று கேள்விச் சபை விதிகளுக்கமைவாகத் தெரிவு செய்யப்பட்டுத் தற்போது இம் மருந்தானது கொழும்பிலுள்ள எமது வைத்தியசாலை இணைப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களில் இம் மருந்து இங்கு எடுத்து வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு கடந்த மாத இறுதிவரை மிகவும் அவசியமான நோயாளர்களுக்கு (TSH) பரிசோதனை இந்த ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். எனவே மேற்குறிப்பிட்ட மருந்துகளை உரிய காலத்தில் எமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணத்தினால் பெறத் தவறினாலும் இயன்றவரை மிகவும் அவசியமான (111 critical patients)நோயாளிகளுக்கு இப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததனைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு இந்நிலை சீராக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பரிசோதனை சம்பந்தமான உண்மை நிலைகளைத் தெரிந்து கொள்ளாது தங்கள் பத்திரிகையில் இக்கட்டுரை வரைந்திருப்பவரின் உள்நோக்கமானது சில தனியார் மருத்துவ ஆய்வுகூட சேவையை வளம்படுத்த எடுப்பதற்கான உள்நோக்கம் கொண்டதாக இருக்கும் என்று சந்தேகப்பட வைக்கிறது.

**இன்னும் சில வாரங்களில் பரிசோதனை வழமையான நிலைக்கு வரும்**

* ஆய்வுகூட மருத்துவ உபகரணங்கள் பழுதடைந்த காரணத்தால் யூரியா குளுக்கோஸ் போன்ற பரிசோதனைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நோயாளர்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த உபகரணங்கள் யாவும் திருத்தம் செய்வதற்கு கொழும்புக்கு அனுப்பப்பட்டு அங்கு திருத்தப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு விமானப் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களில் இப் பரிசோதனைகள் வழமைபோல் மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவிப்பதோடு தங்கள் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்த உபகரணங்கள் திருத்தப்படாமல் ஆய்வு கூடத்தில் கிடப்பில் கிடக்கின்றன என்ற கூற்று சரியானதல்ல. அத்துடன் புதிய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கம்பனி தொழில்நுட்பவியலாளர்களினால் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

* ஆய்வு கூடத்தில் இருக்கின்ற நவீன தன்னியக்க மருத்துவ இரத்தப் பரிசோதனை உபகரணங்கள் ஆனது கடந்த வருடம் முற்பகுதியில் பழுதடைந்து காணப்படுகின்றன. எமது பணிப்பாளர் இவற்றை திருத்துவது சம்பந்தமாக சுகாதார அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல முறை தொடர்பு கொண்டுள்ளார். இந்த உபகரணங்களைத் திருத்துவதுக்குத் தேவையான நிதியினை பெறுவதிலுள்ள தாமதம் காரணமாகவும் அத்துடன் சம்பந்தப்பட்ட கம்பனி தொழில்நுட்பவியலாளர்கள் கொழும்லிருந்து இங்கு வருகை தந்து இப் பழுதினை ஆய்வு செய்தற்கு தற்போது நிலவுகின்ற தங்களுக்கு நன்கு தெரிந்த போக்குவரத்துச் சிரமங்கள் காரணமாகவும் தயக்கம் காட்டி வருவதால் இந்த உபகரணங்களை உடனடியாகத் திருத்த முடியாமல்உள்ளது. எனினும் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு வைத்திய கலாநிதி எஸ்.சிவன்சுதன், வைத்தியகலாநிதி ரி.பேரானந்தராஜா ஆகியோரின் முயற்சியினால் அமெரிக்காவில் உள்ள வைத்தியர் சங்கத்தினர் (IMOH) உதவியுடன் மிக நவீன தன்னியக்க உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன. போக்குவரத்து சிரமங்கள் காரணமாகக் கொழும்பிலிருந்து இங்கு எடுத்துவருவதில் தாமதம் ஏற்படுகின்றது என்பதனைத் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன். அத்துடன் இந்த உபகரணங்கள் இல்லாத போதும் எமது தொழில்நுட்பவியலாளர்களினால் தங்குதடையின்றி நோயாளிகள் பாதிக்கப்படாத வகையில் இயன்றவரை இப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சேவை மூப்புடைய புதிய தொழில்நுட்பவியலாளர் இப்போது சேவையில் உள்ளார்**

* வெளிநோயாளர் பகுதி ஆய்வுகூடத்தில் இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்பாக (15 வருடங்களுக்கு மேலாக) மேற்கொள்ளப்பட்டு வந்த வெளிநோயாளிக்குத் தேவையான அடிப்படைப் பரிசோதனைகள் தற்போது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது மட்டுமல்லாது தற்போதும் நன்கு அனுபவமிக்க சேவை மூப்புடைய புதிய தொழில்நுட்பவியலாளர் ஒருவர் நோயாளர் நலன்கருதி கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார் என்பதனை தெரிவித்துக்கொள்வதோடு தங்கள் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டவாறு நோயாளர் எவரும் பரிசோதனை செய்யமுடியாமல் திரும்பிச் செல்வதில்லை என்பதனை தங்களுக்குச் சுட்டிக்காட்டுவதோடு மேலும் மேலதிக பரிசோதனைகள் செய்வதற்கு வசதியாக VP OPD ஊடாக உள்ளக ஆய்வு கூடத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**தொழில்நுட்பவியலளர்கள் அனைவரும் தகுதிபெற்றவர்களே**

* இவ் ஆய்வு கூடத்தில் தகுதி வாய்ந்த சிறப்புப் பயிற்சி பெற்ற இலங்கை மருத்து சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களே கடமையாற்றுகின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் சுகாதார அமைச்சினால் பயிற்சி முடிவில் நடத்தப்பட்ட பரீட்சையில் முதலாது தடவையில் சித்தி எய்தியவர்கள். ஒரு சிலர் மூன்றாவது தடவையில் சித்தி எய்தினாலும் அவர்களும் தகுதி பெற்றவர்களே. எனவே தங்கள் பத்திரிகையில் குறிப்பிட்டது போன்று, தகுதியற்ற தொழில்நுட்பவியலாளர்கள் எவரும் இங்கு கடமையாற்றவில்லை என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

* இங்கு கடந்த வருட நடுப்பகுதி வரை குருதியியல் நோய் ஆய்வு கூற்றாளர் ஒருவர் கடமையில் இருந்துள்ளார். தற்போது அவர் கொழும்புக்கு மாற்றலாகிச் சென்றாலும் இங்குள்ள நோயாளர்களின் ஆய்வுகூட அறிக்கைகள் (Blood picture Bone Marrow) அவரால் தொடர்ந்தும் ஆய்வுசெய்யப்பட்டு உடனுக்குடன் அறிக்கை முடிவுகள் தொலைநகல் வாயிலாகவும் மின்னஞ்சல் வாயிலாகவும் தெரியப்படுத்தப்படுகின்றது. எனவே பல வருடங்களாக நோய் ஆய்வு கூற்றியலாளர் இந்த ஆய்வு கூடத்தில் இல்லை என்ற தங்கள் பத்திரிகையில் வந்த செய்தியானது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். மேலும் எமது இழையவியல் பரிசோதனைகள் கொழும்பில் உள்ள நோய் ஆய்வு கூற்றியலாளரினால் பரிசோதிக்கப்பட்டு நோயாளர்கள் கொழும்பு செல்லுகின்ற சிரமத்தை தவிர்க்கும் முகமாக அறிக்கைகள் பெறப்படுகின்றன.

* கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள மிகவும் பொறுப்பு வாய்ந்த இரு வைத்திய அதிகாரிகள் இந்த ஆய்வுகூடத்தில் கடமையாற்றுகின்றார்கள். நோயாளர்கள் கொழும்பு செல்லுகின்ற சிரமங்களைத் தவிர்க்கும் முகமாக பல பரிசோதனைகள் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே தங்கள் பத்திரிகையில் குறிப்பிட்டது போன்று சிறப்புத் தேர்ச்சியற்ற வைத்திய அதிகாரிகள் எவரும் இவ் ஆய்வு கூடத்தில் இல்லை என்ற கூற்றானது உண்மைக்குப் புறம்பானதாகும். மாறாக இவ்வாறு தங்கள் பத்திரிகையில் வெளிவந்த செய்தியானது அவர்களின் மனதினை வேதனைப் படுத்துவதாகவே அமைகின்றது. அடுத்து பிரதம ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளருக்கான வெற்றிடம் (Superintendent)கடந்த பத்து வருடங்களாக இந்த ஆய்வுகூடத்தில் நிலவி வந்துள்ள போதிலும் இந்த ஆய்வு கூடமானது பல இன்னல்களுக்கு மத்தியில் தனது சேவையை இயன்றவரை சிறப்பாக நோயாளர்களுக்கு வழங்கி வந்துகொண்டிருக்கின்றது.

* யாழ்.மாவட்டத்தில் அநேக வாசகர்களைக் கொண்டுள்ள அபிமானம் பெற்ற முதல்தரப் பத்திரிகையான தங்கள் உதயன் பத்திரிகை எமது ஆய்வுகூட சேவையை வளம்படுத்த சமுதாயக் கண்ணோட்டத்துடன் சமூக பொது அமைப்புகள் தொண்டர் நிறுவனங்களின் உதவியைப் பெற்றுத் தர வேண்டும் என்பதே எமது பேரவா.

நோயாளர் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாகவும் ஆய்வுகளை தொழில்நுட்பவியலார்களினதும் மற்றும் வைத்திய அதிகாரிகளினதும் மனதினை புண்படுத்தும் முகமாகவும் கட்டுரைகள் வரைவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் ஆகும்.

**நீரிழிவு நோயாளர்களுக்கான தனிச் சிகிச்சை நிலையம்**

* மேலும் பொது மக்களிடம் இருந்து பெறப்படும் நிதிஉதவிகள் அவர்களது தேவைகளை நிறைவேற்ற உரிய முறையில் பயன்படுத்தப்படுவதோடு அந்நிதிகள் செலவிடப்படும் விவரங்களை எமது வைத்தியசாலையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதியாக எமது ஆய்வுகூட சேவையின் இன்னொரு வளர்ச்சியாக (Tele medicine) சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ்.சிவன்சுதன் அவர்களின் முயற்சியால் நீரிழிவு நோயாளர்களுக்கான சிகிச்சை நிலையமும் ஆய்வுகூட வசதிகளும் (Diabetic Center) ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்திலிருந்து இலங்கை வந்த அகதிகளின் படகு கவிழ்ந்ததில் 7 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

## 3 பேர் கடற்படையால் மீட்பு

இராமேஸ்வரம், செப். 15

மண்டபம் தோணித்துறையிலிருந்து பொலிஸாருக்குத் தெரியாமல் இலங்கைக் குத் தப்பிச் சென்ற அகதிகளின் படகு நடுக் கடலில் மூழ்கியதால் 7 பேர் நீரில் மூழ்கி இறந்தனர். படகோட்டி உட்பட 4 பேர் நீந்திக் கரை சேர்ந்தனர். 3 பேரை கடற் படை மீட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதுரை, பழனி, மானாமதுரை, திரு வண்ணாமலை ஆகிய ஊர்களில் உள்ள முகாம்களில் வசிக்கும் 13 அகதிகள் வெளியே பொருள்கள் வாங்கச் செல்வது போல சென்று அங்கிருந்து இராமேஸ்வரம் அருகில் உள்ள மண்டபம் வந்தார்கள். இலங்கைக்குத் தப்பிச் செல்வதற்காக முகவர் ஒருவர் தலா ரூ. 6 ஆயிரம் பெற்றுக்கொண்டு அவர்களை மண்டபம் அழைத்து வந்தார். அவர்கள் கடந்த் 11 ஆம் திகதி இரவு 9 மணியளவில் மண்டபம் தோணித்துறையிலிருந்து நாட்டுப் படகில் இலங்கைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

கடந்த 2 நாள்களாகவே மண்டபம், இராமேஸ்வரம் பகுதியில் கடல் கொந் தளிப்புடன் காணப்பட்டது. இந்த நிலையில்13 பேரையும் ஏற்றிய படகு கடல் கொந்தளிப்பில் சிக்கி தடுமாறியவாறு சென்றது. படகோட்டியும் குடிபோதையில் இருந்ததால் அவர் இலங்கைக்குச் செல்வதற்கு திசை தெரியாமல் இருளில் தவித்தவாறு படகை ஓட்டிச் சென்றார்.

இந்தப் படகு கடந்த வெள்ளியன்று தனுஷ்கோடி அருகே 3 ஆம் மணல்திட்டுக்கும் 4 ஆம் மணல் திட்டுக்கும் இடையே நடுக்கடலில் திடீரென்று கவிழ்ந்தது. இதனால் படகிலிருந்த 13 பேரும் கடலில் மூழ்கினார்கள். அவர்கள் உயிர் தப்புவதற்காக 3 ஆம் மணல் திட்டை நோக்கி நீந்தினார்கள்.

கடந்த வெள்ளியன்று காலை 10 மணியளவில் கரை சேர்ந்த இவர்கள் உணவு, குடிதண்ணீரின்றி அங்கேயே தவித்தபடி நின்று இருந்தனர். அப்போது இவர்களிடம் வேறு ஒரு படகை கொண்டு வருவதாக கூறிவிட்டு படகோட்டி அங்கிருந்து நீந்திச் சென்றார். அவரை எதிர்பார்த்தவாறு 6 பேரும் அன்று இரவு முழுவதும் மணல் திட்டிலேயே தவித்தார்கள்.

ஆனால், பூமணி (வயது - 68) என்ற மூதாட்டி, ரெஜினோல்டு என்பவரது மனைவி சகாயமேரி (வயது 27), நித்யா (வயது 25),கோபிகா (வயது 7), ஆண் குழந்தை ஒன்று உட்பட 7 பேர் மூழ்கி இறந்தார்கள்.

இதயராணி (வயது 42), செல்வநாதன் (வயது 25), ரெஜினோல்டு, ரவி, சுமன் மற்றும் படகோட்டி உட்பட 7 பேர் கடலில் நீந்தி 3 ஆம் மணல்திட்டில் கரையேறினர்.

இந்தச் சூழ்நிலையில் பொலிஸாருக்குப் பயந்து ரவி, சுமன் மற்றும் ஒருவர் உட்பட 3 பேர் கடலில் நீந்தி அரிச்சல்முனைக்குச் சென்று அங்கிருந்து தப்பிவிட்டனர்.

இந்த நிலையில், 3 ஆம் மணல்திட்டில் 3 பேர் தவித்துக்கொண்டு இருக்கின்றனர் என இராமேசுவரம் கடற்படைக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, கடற் படையினர் மீட்புப் படகில் விரைந்து சென்று அங்கு தவித்துக்கொண்டிருந்த இதயராணி, செல்வநாதன், ரெஜினோல்டு ஆகிய 3 பேரையும் மீட்டு இராமேஸ்வரம் கடற்படை முகாமிற்கு கொண்டு வந்தனர். (அ-ஒ)

# கிழக்குத் திமோரை பூகம்பம் தாக்கியது

ஜகார்த்தா, செப். 15

கிழக்குத் திமோரை நேற்று ஞாயிற்றுக் கிழமை கடும் பூகம்பம் தாக்கியது. இந்தப் பூகம்பத்தில் உயிரிழப்போ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை.

(அ-ஒ)

# 8 படகுகளுடன் தமிழக மீனவர் 30 பேர் இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிப்பு

இராமேஸ்வரம், செப். 15

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மற்றும் நாகபட்டணத்தைச் சேர்ந்த 38 மீனவர்களை 8 படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்துச் சென்றுள்ளனர் எனத் தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து மேலும் வெளியான தகவல்கள் வருமாறு:-

இராமேஸ்வரம் அருகே உள்ள தங்கச்சிமடம் விக்டோரியா நகர் பகுதியை சேர்ந்த செல்வகுமார் மற்றும் சிரோன் ஆகியோருக்குச் சொந்தமான படகில் 11 மீனவர்கள் கடந்த 11ஆம் திகதி நாட்டுப்படகில் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் கடலிலேயே 5 நாள்கள் வரை தங்கியிருந்து மீன்பிடிப்பர். இதனால் மீனவர்கள், கடலில் மீன்பிடித்துக்கொண்டிருப்பர் என உறவினர்கள் நினைத்திருந்தனர். ஆனால், இவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டனர் என்ற செய்தி நேற்றுமுன்தினம் தெரியவந்தது.

இதேபோல் நாகப்பட்டினத்தில் இருந்து 6 படகுகளில் மீன்பிடிக்கச்சென்ற 27 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் சிறைப்பிடித்துள்ளனர். இவர்கள் அனைவரும் இலங்கைக் கடற்படையினரின் பாதுகாப்பிலுள்ளனர்.

இவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள தகவலை நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்தில் உள்ள மீன்துறை அதிகாரிகளுக்கு இலங்கைக் கடற்படையினர் 'பக்ஸ்' மூலம் தெரிவித்துள்ளனர். அதில் மொத்தம் சிறைப்பிடிக்கப்பட்ட 38 மீனவர்களையும் விடுவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ)

# பாகிஸ்தானில் அமெ. தாக்குதல் 5 சிவிலியன்கள், 7 தீவிரவாதிகள் பலி

இஸ்லாமாபாத், செப். 15

வட - மேற்குப் பாகிஸ்தானில் அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலுக்கு ஐந்து சிவிலியன்களும், ஏழு தீவிரவாதப் போராளிகளும் பலியானார்கள். மீரான்ஷா நகருக்கருகில் இரு கட்டடங்கள் தகர்ந்து விட்டன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஆப்கான் எல்லையை ஒட்டியுள்ள வட வசிரிஸ்தான் பிராந்தியத்திலுள்ள மிக முக்கிய நகரம் மீரான்ஷாவாகும். ஆப்கான் எல்லையிலிருந்து அவ்வப்போது அமெரிக்கத் துருப்புகள் இப் பிராந்தியத்தை நோக்கி ஏவுகணைத் தாக்குதல் கள் நடத்தி வருகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பாகிஸ்தானின் ஒப்புதலைப் பெறாமலே அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், பாகிஸ்தான் எல்லைக்குள்ளும் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்த, தம் படைகளுக்கு அங்கீகாரமளித்துள்ளார். இதனால் இத்தாக்குதல்கள் முழு வீச்சில் நீடிக்கக்கூடும் என நகர அதிகாரியொருவர் அச்சம் தெரிவித்தார்.

ஏவுகணைகளின் தாக்குதல்களால் தகர்ந்து விழுந்த கட்டிடங்களின் சிதைவுகளுக்குள் சிக்கி மரணித்த சிவிலியன்களில் மூன்று பெண்களும், இரு சிறார்களும் அடங்குவர். மற்றைய எழுவரும் தலிபான் போராளிளாவர் என்றும் அவ் அதிகாரி விவரித்தார்.

ஆளில்லா அமெரிக்க விமானமொன்றிலிருந்து இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என உள்ளூர் வாசிகள் குறிப்பிட்டார்கள். காலை 5.30 மணியளவில் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேஜர் முராட்கான் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

(அ-ஒ)

# ரஷ்ய விமான விபத்து: 88 பயணிகள் மரணம்

மொஸ்கோ, செப். 15

88 பயணிகளுடன் சென்ற ரஷ்ய விமானமொன்று, மத்திய ரஷ்யாவின் பேர்ம் நகருக்கருகில் வெடித்துச் சிதறி விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த அனைவரும் பலியாகிவிட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இந்த விமானம் வெடித்து, தீக்கோளங்களாக சிதறியது என நேரில் கண்டவர்கள், பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்கள். போயிங் - 737 என்னும் இவ் விமானம், தேசிய விமானசேவை நிறுவனமான ஏரோபுளட்டுக்குரியது.

இறங்கவேண்டிய இடத்தை இவ் விமானம் அண்மித்துக்கொண்டிருந்த சமயம், கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இது இழந்தது என அதிகாரி கள் குறிப்பிட்டார்கள்.

பேர்ம் நகருக்கு அப்பால், யூரோல்ஸ் என்னுமிடத்தில் இவ் விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சம்பவம் நிகழ்ந்த பகுதிக்கு மீட்புப் பணிக்குழு விரைந்துள்ளது. விபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

பிந்திய தகவலின்படி, நகர எல்லைக்கருகிலுள்ள பள்ளத்தாக்கில் இவ் விமானச் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என விசாரணையாளர் விலாதிமா மார்க்கின், ரஷ்ய ரினா நொவெஸ்தி செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இவ் விமானத்தில் 7 சிறார்கள் உட்பட 82 பயணிகளும், 6 சிப்பந்திகளும் இருந்துள்ளனர். இவர்களில் 21 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அஜர்பைஜான், உக்ரைன், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, லத்வியா, அமெரிக்கா, ஜெர்மனி, துருக்கி, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என ஏரோபுளொட் நிறுவனம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ)

# புதுடில்லி தொடர் குண்டுவெடிப்பில் பலியானோர் எண்ணிக்கை முப்பதாக உயர்ந்தது

புதுடில்லி, செப். 15

தலைநகர் டில்லியில் சனநெரிசல் மிகுந்த 6 இடங்களில் 17 நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து 7 குண்டுகள் வெடித்ததில் 30 பேர் உடல்சிதறிப் பலியானார்கள். 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் திடீரென்று தீவிரவாதிகள் டில்லியைக் குறிவைத்துக் குண்டு வெடிப்புத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இருந்து 40 நிமிடங்களில் அடுத்தடுத்து 6 இடங்களில் 7 குண்டுகள் வெடித்தன. முதல் குண்டு, மத்திய டில்லியில் கரோல் பாக் பகுதியில் வெளிநாட்டுப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் பரபரப்பான சந்தைப் பகுதியில் வெடித்தது. அதைத் தொடர்ந்து கன்னாட் பிளேஸ் பாலிகா பஜார் பகுதியிலும், தெற்கு டில்லியின் முக்கிய பகுதியான கிரேட்டர் கைலாஸ் எம். பிளாக் சந்தைப் பகுதியிலும் அடுத்தடுத்து 6 இடங்களில் மொத்தம் 7 குண்டுகள் வெடித்தன.

டில்லியை உலுக்கிய மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 30 பேர் பலியானார்கள். 100இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கபார் சந்தைப் பகுதியில் ஓட்டோவிலும், ஸ்கூட்டரிலிருந்த ஒரு சிலிண்டரிலும் வெடிகுண்டுகள் மறைந்து வைக்கப்பட்டிருந்தன. குண்டுவெடித்த வேகத்தில் அந்த ஓட்டோ 12 அடி உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல வாகனங்கள் சேதமடைந்தன.

பாலிகா பஜார் மற்றும் கிரேட்டர் கைலாஸ் சந்தையில் குப்பைத் தொட்டியில் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. கான்னாட்பிளேஸ் பகுதியில் செல்போன்கள் மூலம் வெடிக்கச் செய்யும் குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று உளவுத்துறையினர் கருதியதால் உடனடியாக அவற்றைச் செயலிழக்க வைக்கும் ஜாமர் கருவிகள் பொருத்தப்பட்டன. (அ-ஒ)




சந்நிதி முருகனுக்கு இன்று தீர்த்தத் திருவிழா

காலை 8.15 மணிக்கு விநாயகர் ஆலய முன்றிலில்

வேலவனின் தீர்த்த உற்சவம் நடைபெறுகின்றது.



அவன் அருள் வேண்டிப் பிரார்த்திப்போர்

பொ.இராசதுரை பருத்தித்துறை.

ரஜினி பீடா ஸ்ரோர்ஸ் உடுப்பிட்டி.

லிங்கம் கிறீம் ஹவுஸ் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சீமாட்டி புடைவையகம் மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா, யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் ஆகியோர் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் வழிபாட்டை முடித்துக் கொண்டு வெளி மண்டபத்துக்கு வந்தவேளை எடுக்கப்பட்ட படம் இது.
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரும் ஏனைய உயர் அதிகாரிகளும் ஆலய முன்றிலில் ஒருசேர நிற்பதை இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## சரவணையில் குடும்பஸ்தர் ஒருவர் வீட்டிலிருந்து சென்ற வேளை சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப்.15

சரவணையில் உள்ள காளி கோயிலுக்கு அருகில் வைத்து இனந் தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நல்லையா முருகதாஸ் (வயது 30) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

உயிரிழந்தவர் வீட்டிலிருந்து வெளியில் சென்றவேளை, ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை பார்வையிட்ட ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகேந்திரன் பிரேத பரிசோதனைக்காக அதனை வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (அ-203-25)

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் அவர்களது வீட்டிற்கு அருகில் நின்றிருந்த சமயம், கறுப்பு நிற அங்கி அணிந்த நபர் ஒருவர் அந்த இடத்துக்குவந்து இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றார் எனப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். சம்பவத்துடன் தொடர்புடையவரைக் கைதுசெய்யும் முகமாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (சி)

பதவி வெற்றிடம்
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. Instructor (MSO, DTP) full time
2. Instructor (Auotocad) part time
3. Instructor (Video Editing ) part time
20.09.08 இற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

100% Practical Education
பல புதிய விடயங்களுடன்
Dip. In Hardware Engineering
சகல வகையான கணினிகளையும்
மிகக் குறுகிய காலத்தில் நீங்களே
திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி
பதிவுகள் 18.09.08இற்கு முன்
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

## யாழ்.பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி குழுவின் தலைவர் பேராசிரியர் கொலின் பீரிஸும் மற்றும் அறுவரும் இதில் அடங்குவர்.

மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் பேரா சிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் பீடாதிபதிகளுடன் நேற்றுப் பூர்வாங்கக் கலந்துரையாடல்களை நடத்தினார்.

பேராசிரியர் சமரநாயக்காவும் அவருடன் வந்த குழுவினரும் நேற்று சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டனர்.

இன்று முழுநாளும் யாழ்.பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி குறித்து பீடாதிபதிகள், தலைவர்கள் மூத்த பேராசிரியர்களுடன் மாநாடுகளை நடத்தி, அபிவிருத்திக்கான தேவைகள், வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வர். (அ)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியிலிருந்து வரும் புலிகளின் விமானங்களை இந்த எவ்-7 ரக விமானங்கள் கலைத்துச் சென்று தாக்க முயற்சித்தாலும், கட்டுநாயக்கா வான்படைத்தளத்திலிருந்து இவை செல்லும் முன்னர் புலிகளின் விமானங்கள் குறித்த இலக் கைத் தாக்கி விடும் அபாயமே தற்போது நிலவுகின்றது.

இந்நிலையில், புலிகளின் விமானங்கள் இலக்கைத் தாக்கும் முன்னர் - ராடரில அவை தென்பட்ட உடனேயே - கொழும்பிலிருந்து வேகமாகச் சென்று அவற்றைத் தாக்குவதற்கு ஏதுவாக புதிய ரக வான் சமர் விமானங்களை கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இதன்பொருட்டு, மிக்-29 எனப்படும் அதிவேக விமானங்கள் ஐந்தை இந்த ஆண்டுக்குள் தனது வான் படையில் இணைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவின் எவ்-15 மற்றும் எவ்-16 ரக விமானங்களுக்குப் போட்டியாக ரஷ்யாவால் தயாரிக்கப்பட்ட இந்த மிக்-29 ரக விமானங்களை வாங்கவே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது - எனக் கூறப்பட்டது. (சி)

## தொண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியவை வருமாறு:-

வடக்கு - கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளில் பணி புரியும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த வைத்தியர்களை நீக்கி விட்டு அவர்களின் வெற்றிடங்களுக்கு நாட்டின் தென்பகுதியைச் சேர்ந்த வைத்தியர்களையும் வெளிநாட்டில் உள்ள எமது நாட்டு வைத்தியர்களையும் நியமிக்க சுகாதார அமைச்சு முடிவுசெய்துள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள படையினரதும் மக்களினதும் நலன் கருதியே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தெற்கில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றபோதும் வடக்கு - கிழக்கிற்கு முன்னுரிமையளிக்கின்றோம் - என்றார். (அ-சி)

மிக விரைவில் வெளிவருகிறது
புலமைப்பரிசில் பரீட்சை- 2009
தற்போது தரம் 04இல் கற்கும் மாணவர்களை 2009 ஆகஸ்ட் பரீட்சைக்கு தயார் படுத்தும் முன்னோடி வழிகாட்டி பயிற்சி வினாத்தாள்கள்.
1995முதல் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக வேண்டி மாதிரி வினாத்தாள்களை விநியோகித்துவரும் சிந்தனை வட்டத்தின் மாதிரி வினாத் தாள்களை யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் ஏக உரிமை இலக்கம் 07, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அன்னை புத்தக நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் முதல் கட்டமாக தரம் 04ற்கான ஆறு மாதிரி வினாத்தாள்களைக் கொண்ட பொதியினை அன்னை புத்தக நிலையத்தில் அடுத்த வாரம் முதல் பெற்றுக் கொள்ளலாம். எமது மாதிரி வினாத் தாள்கள் தங்கள் பாடசாலைகளுக்குத் தேவைப்படுமிடத்து அன்னை புத்தக நிலையத் துடன் தொடர்பு கொள்ளவும்.
வினாப்பத்திர தயாரிப்பு : புன்னியாமீன் / மஸீதா புன்னியாமீன்
தகவல் : கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்
தொலைபேசி : 0812 493746

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
CHEMISTRY
2010 A/L
பிரிவு II
வெப்ப இரசாயனம்
ஆரம்பம் -
16.09.2008
Tue -
6.30-7.30am
BY RAJAH

## சந்நிதி முருகனின் தேர்ப்பவனி காண கடந்த வருடங்களைவிட அதிக பக்தர்கள்

### நான்கு வீதிகளும் நிரம்பி வழிந்தன

நேற்று நடைபெற்ற செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்குபற்றினர் இதற்கு முந்திய வருடங்களைவிட இம்முறை அதிகமானோர் முருகனின் தேர்த்திருவிழாக் காண வந்திருந்தார்கள் என மதிப்பிடப்பட்டது.

ஆலயத்தின் நான்கு வீதிகளும் அடியார்களால் நிரம்பி வழிந்தன. மு.ப. 10 மணியளவில் முருகன் தேரில் ஆரோகணித்தார்.

முன்னால் விநாயகப்பெருமானின் தேரும் அதனை அடுத்து வேல் பெருமானின் தங்க ரதமும் இவர்ந்துசெல்ல வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் மூன்றாவது தேரில் பவனி வந்து பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கியமை கண்கொள் ளாக் காட்சியாகும்.

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசத்தில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் ஆட்டக் காவடி, கரகம், தூக்குக் காவடி, பாற்குடம், கற்பூரச் சட்டி, அங்கப் பிரதட் சணை ஆகியவற்றினை இயற்றித் தத்தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

அதிக அளவிலான ஆயிரக்கணக்கான அடியார்கள் பங்குபற்றினர். இம்முறை தேர்த்திருவிழா உற்சவத்தின்போது தொல்லை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

வலிகாமம், யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய இடங்களில் உள்ள மக்களே ஆலயத்தின் கிழக்கு வீதிப் புறத்தாலும் வடக்குப் புற வீதி வழியாகவும் வந்து தேர்த் திருவிழாவில் பங்குபற்றினர். தேர்ப்பவனி சுமார் 11 மணிக்கு நிறைவேறியது. (அ-70)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறிவிட்டன.கடந்தவெள்ளிமற்றும்சனி ஆகிய தினங்களில் வன்னிப்பகுதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

பெரும்பாலும் நாளை (அதாவது இன்று திங்கட்கிழமை) எங்களுடைய ஏனைய பணியாளர்கள் மற்றும் பொருள்களை வன்னியிலிருந்து வெளியேற்ற ஆரம்பிப்போம் என்று நம்புகின்றோம். வன்னியிலிருந்து முற்றாக வெளியேறியவுடன்எமதுபணியாளர்கள் வவுனியாப் பிரதேசத்தில் செயற்படுவர். ஆனால், இங்கு பணிபுரிவது மிகக் கடினமாக இருக்கும். அதிலும் சண்டை உக்கிரமடையும் வேளை யில் இங்கு பணிபுரிவதென்பது மிக மிகக் கடினமாக இருக்கும்.

வன்னியிலிருந்து நாங்கள் வெளியேறினாலும் அங்குள்ள மக்களின் தேவைகள் குறித்து நாங்கள் விழிப்பாக இருப்போம். அதேசமயம், இலங்கை அரசு என்ன செய்யவேண்டும் என்று சொல்கிறதோ அதை நாங்கள் மதிக்கவேண்டும் எங்களுடைய பாதுகாப்பையும் நாங்கள் உறுதியாக்கிக்கொள்ள வேண்டும் - என்றார்.(அ-சி)

## அவசியமின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனையடுத்து கொழும்பில் சில பகுதிகளில் சுற்றிவளைப்புத் தேடுதல்களில் ஈடுபட்ட பாதுகாப்புத் தரப்பினர் அங்கு தற்காலிகமாகத் தங்கியிருக்கும் சில தமிழ் மக்களிடம் குறிப்பிட்ட காலத்துக்குள் கொழும்பிலிருந்து வெளியேறுமாறு கோரினர் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுதொடர்பில் வினவியபோதே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை மேற்கோள்காட்டி ஊடகங்களில் வெளியான செய்தி உண்மையானதே. கடந்த சில காலங்களில் பாதுகாப்புத் தரப்பினரால் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் அவசியமான காரணங்களின்றிய நிலையில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் தங்கியிருக்கின்றமை தெரியவந்தது.

சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இவ்வாறு தங்கியுள்ளனர். இவ்வாறு இவர்கள் தங்கியிருப்பதால் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் நிலவுகின்றது. அதனாலேயே அவர்களை வெகுவிரைவில் வெளியேற்றவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இந்நடைமுறை அமுலுக்குக் கொண்டுவருவதால் வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வருகை தந்து வேலைசெய்வோர் மற்றும் நிரந்தரமான குடியிருப்புக்களை மேற்கொண்டோர் பாதிக்கப்படப் போவதில்லை - என்றார். (அ-சி)

## வட்டக்கச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று வீடுகள் சேதமடைந்தன.

அன்றைய தினம் வட்டக்கச்சிப் பகுதியை வட்டமிட்ட விமானங்கள் சுமார் 8 குண்டுகளை கொட்டித் தீர்த்தன. இச்சம்பவத்தில் படுகாயமடைந்த சந்திராச சுதாகரன் என்பவர் சிகிச்சைக்காக கிளி நொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

## தொண்டர் அமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் வன்னியில் அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டு வந்தன. அங்கு யுத்தம் தொடங்கியுள்ளதால் அப்பணிகளை அரச சார்பற்ற நிறுவனங்களால் முன்[illegible]டுக்க முடியவில்லை.

இந்த யுத்த நேரத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்தும் அங்கு இருப்பது அந்நிறுவனங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதால் நாம் அந்நிறுவனங்களை அங்கிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருமாறு கேட்டிருந்தோம்.

எழுது உத்தரவை ஏற்காமல் அந்நிறுவனங்கள் தொடர்ந்தும் வன்னியில் இருந்தால் அந்நிறுவனங்களின் பாதுகாப்புக்கான பொறுப்பை அரசால் ஏற்க முடியாது.

தொண்டுநிறுவனங்கள்வெளியேறினாலும் வன்னி மக்களை கைவிடமாட்டோம்

குறிப்பாக வன்னியில் பணியாற்றும் ஐ.நா. அதிகாரிகளது பாதுகாப்பில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

ஐ.நாவின் மனிதாபிமானப் பணிகளை அரச அதிபர்களிடம் ஒப்படைத்துவிட்டு வவுனியாவில் தங்களது அலுவலகத்தை அமைத்துக்கொள்ளுமாறு நாம் அ[illegible]களுக்கு அறிவுறித்தியுள்ளோம். அதேபோல், ஏனைய அரச சார்பற்ற நிறுவங்களின் பணியாளர்களுக்கும் அறிவுறுத் தியுள்ளோம்.

தற்போது வன்னியில் அரச நிர்வாகம் சீராக இருப்பதால் மனிதாபிமானப் பணிகள் பாதிப்படையா. அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியேறினாலும் நாம் வன்னி மக்களை கைவிடமாட்டோம். (அ-சி)

PHYSICS
A/L 2009
புலங்கள்
ஆரம்பம்:- 16.09.08
Tue - 6.15 a.m.
(Tue, Thur- 6.15-7.30 a.m.)
K.Selvan
CHEMISTRY
A/L 2010
வெப்ப இரசாயனம்
ஆரம்பம்:- 16.09.08
Tue - 6.15 a.m.
(Tue, Fri- 6.15 - 7.30 a.m.)
S.Vasu
NEC
Clock Tower Road, Jaffna

RAM COMMUNICATION
உள்நாட்டு, வெளிநாட்டுக்கான தொலைபேசி அழைப்புகளுக்கான விசேட கட்டணங்கள் 10-14.08 அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் பல தகவல்களுக்கு
Internet, IDD, Lamination, Typing, Photo Copy, E.mail, Scanning இன்னும் பலசேவைகளுக்கு.
குறைந்த கட்டணங்களில் தரமான வேகமுடைய Internet Browsing
RAM COM
No. 6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel :-021 222 8428
E-mail:- n.ram com @ yahoo.com Fax:- 021 222 2007

கணினித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...
விசேட சிறப்பு சலுகை
100% செய்முறைப்பயிற்சி
தமிழ் மொழி விளக்கங்களுடன் முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
DIPLOMA IN HARDWARE ENGINEERING
Fee 1,500/= only ஆரம்பம் : 15/08/2008, 17/08/2008, 20/08/2008 10.00 a.m.
Microprocessor, Various Mother Board Handing,All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation of - O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking
DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி வினாத்தாள் - 2008 டிசம்பர்
General Certificate of Education (Ord.Level) Model Question Paper - 2008 December

| T | |
|---|---|
| 22 | I |

## தமிழ்மொழியும் இலக்கியமும் - 1
## Tamil Language & Literature - I

ஒரு மணித்தியாலம்
One hour

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

வாரப்பத்திரிகை ஒன்றுக்கு வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தின் சிறு பகுதி தரப்படுகின்றது. இப் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக் களுக்கான விடையைத் தெரிவு செய்க.

இலங்கை அண்மைக் காலமாக எரிபொருளுக்கு என்று பெருந்தொகை மானியங்களை வழங்கி வருகின்றது. இதன் காரணமாக மின்சாரத்தின் விலையேற்றத்தையும், போக்குவரத்துச் சேவைக் கட்டண உயர்வையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது. மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டிய கதையாக விலையேற்றம் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் மோசமாகப் பாதித்துள்ளது. அதற் கானபரிகாரத்தை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

01. அண்மை என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
1) நெருக்கம். 2) அண்மை. 3) சேய்மை. 4) தூய்மை.

02. ஏற்றம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
1) உயர்வு. 2) இறக்கம். 3) பள்ளம். 4) எழுச்சி.

03. 'மோசமாக' என்ற சொல்லுக்கு இணையான சொல்,
1) உயர்ந்த. 2) இழிவாக. 3) காரசாரமாக. 4) பாதகமாக.

04. விழுந்தவனை என்பது,
1) வினையடி. 2) வினைமுற்று.
3) வினையெச்சம். 4) விணையாலனையும் பெயர்.

05. மானியங்களை என்ற பகுபதத்தின் பிரிப்பு முறை,
1) மானியம் + களை. 2) மானியங்க்ள் + ஐ.
3) மானியம்+ ஐ+களை. 4) மானி+ அம்+கள்+ஐ

06. மானியங்களை என்ற பகுபதத்தில் இடம்பெறும் ஐ என்ற உறுப்பு உணர்த்தும் இலக்கணப் பொருள்,
1) பன்மை. 2) செயப்படுபொருள்.3) விகுதி. 4)வேற்றுமை.

07. 'மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டியதுபோல' என்ற உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்,
1) துயரத்திற்கு மேல் துயரம் உருவாதல். 2) மாடுகள் பெறும் இம்சை.
2) மாடு ஆபத்தானது. 4) வேதனைக்கு எல்லை கிடையாது.

08. இப் பந்தியில் இடம்பெறும் அவசியமற்ற சொல்,
1) என்று. 2) வேண்டும். 3) அண்மைக் காலம். 4) மோசமாக.

09. இப் பந்தி கூற முனையும் கருத்து,
1) விலையேற்றமும் மானியமும்.
2) மானியமும் அதன் பாதிப்பும்.
3) விலையேற்றத்திற்கான காரணிகளும், தீர்வு வழிகளும்.
4) விலை உயர்வுக்கான காரணமும், அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும்.

10. இப் பந்தி முற்றுப் பெறவில்லை என எண்ணுகிறீர்களா? அவ்வாறாயின் முடிக்கும் பொருத்தமான தொடர்,
1) என்று பொது மக்கள் பேசிக் கொள்கின்றனர்.
2)என்று பொது மக்கள் வேண்டுகின்றனர்.
3) பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.
4) என்று பொது மக்கள் அறிவிக்கின்றனர்.

**எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

11. 1) களைக்கொல்லி பாவனை அதிகரித்து வருகின்றது.
2) கலைக்கொல்லி பாவனை அதிகரித்து வருகின்றது.
3) களைக்கொல்லி பாவணை அதிகரித்து வருகின்றது.
4) களைக்கொல்லி பாவணை அதிகரித்து வருகின்றது.

12. 1) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சமுக நலன் கருதி வடிவமைக்கப்படல் வேண்டும்.
2) தொலைக்காற்சி நிகழ்ச்சிகல் சமூக நலன் கருதி வடிவமைக்கப்படல் வேண்டும்.
3) தொலைக்காட்சி நிகள்ச்சிகள் சமூக நலன் கருதி வடிவமைக்கப்படல் வேண்டும்.
4) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சமூக நலன் கருதி வடிவமைக்கப்படல் வேண்டும்

13. 1) அறம் பற்றிய நம்பிக்கை வளர உழைக்க வேண்டும்.
2) அரம் பற்றிய நம்பிக்கை வளர உலைக்க வேண்டும்.
3) அறம் பற்றிய நம்பிக்கை வலர உழைக்க வேண்டும்.
4) அரம் பற்றிய நம்பிக்கை வழர உழைக்க வேண்டும்.

14. 1) கள்வித் திணைக்களழ் பாடநூல்களை வெளியிடுகின்றது.
2) கல்வித் திணைக்கலம் பாடநூல்களை வெளியிடுகின்றது.
3) கல்வித் திணைக்களம் பாடநூல்களை வெளியிடுகின்றது.
4) கல்வித் திணைக்களம் பாடநூல்கலை வெளியிடுகின்றது.

15. 1) விலைவாசி உயர்வுக்கு எதிராக தொழிலாளர்கள் போராடினர்.
2) விலைவாசி உயர்வுக்கு எதிராக தொழிழாளர்கள் போராடினர்.
3) விலைவாசி உயர்வுக்கு எதிராக தொழிளாளர்கள் போராடினர்.
4) விலைவாசி உயர்வுக்கு எதிராக தொலிலாளர்கள் போராடினர்.

**கருத்து தெளிவான வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

16. 1) புதிய கண்டி அபிவிருத்தி வங்கி
2) விரைந்து பாடசாலை மாணவர்கள் சென்றனர்.
3) அவன் தான் சொன்னதாக சொன்னான்.
4) நான் நாளைக்குக் கொழும்புக்குப் போவான்.

17. 1) ஒரு இலங்கை இணிய நாடு. 2) ஒரு இலங்கை இனிய நாடு.
2) இலங்கை இனிய ஒரு நாடு. 3) இலங்கை ஒரு இனிய நாடு.

18. 1) குயில்கள் பாட மயில்கள் ஆட சோலை கண்டேன்.
2) சோலையில் குயில்கள் பாட மயில்கள் ஆடவும் கண்டேன்.
3) சோலையில் குயில்களும் மயில்களும் கண்டேன்.
4) சோலையில் குயில்கள் பாட மயில்கள் ஆடக் கண்டேன்.

19. 1) வீடு புதிய கட்டி முடிக்கப்பட்டது. 2) புதிய வீடு கட்டி முடிக்கப்பட்டது.
3) வீடு கட்டி புதியதாக முடிக்கப்பட்டது. 4) புதிய வீடு கட்டி விடப்பட்டது.

20. 1) கட்டாக்காலி கொடிய நாய்கள் பெருந் தொல்லையாக உள்ளது.
2) கட்டாக்காலி நாய்கள் பெருங் கொடிய தொல்லையாக உள்ளது.
3) கொடிய கட்டாக்காலி நாய்கள் பெருந் தொல்லையாக உள்ளது.
4) கட்டாக்காலி நாய்கள் பெருந் தொல்லையாக கொடிய உள்ளது.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. அம்மா தொட்டிலை ஆட்டினாள். ஆட்டினாள் என்பது,
1) தன்வினை. 2) பிறவினை.
3) செய்வினை. 4) செயப்பாட்டு வினை.

22. இங்கே வந்தவனைக் காணவில்லை. வந்தவனை என்பது,
1) எச்ச வினை. 2) முற்றுவினை.
3) வினையாலணையும்பெயர். 4) கூட்டுவினை.

23. பின்வருவனவற்றுள் எழுவாய் தொக்கி நிற்கும் வாக்கியம்,
1) பணம் பாதாளம் மட்டும் பாயும்.
2) அழுத பிள்ளை பால் குடிக்கும்.
3) துணை போனாலும் பிணை போகாதே.
4) வேலிக்கு வைத்த முள் காலில் தைத்தது

24. இன்சொல் இன்னாதவற்றைத் துரத்தும். இன்சொல் என்பது,
1) பண்புத்தொகை. 2) உவமைத் தொகை.
3) வேற்றுமைத் தொகை. 4) அன்மொழித்தொகை.

25. பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல்,
1) வா. 2) கடி. 3) வீசு. 4) முயல்.

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

26. நாம் கூறியவற்றையே,
1) அவர் கூறுவர். 2) அவரும் கூறினார்.
3) அவர்களும் கூறுவர். 4) அவர்கள் சொன்னார்.

27. தக்க காரணங் காட்டினாலன்றி நீர் கடமையினின்றும்,
1) நீங்குவீர். 2) நீக்கப்படுவீர்.
3) நீக்கப்படமாட்டாய். 4) நீக்கப்படுகின்றீர்.

28. இரவு பகலாய் உழைத்தான்,
1) வாழ்க்கையில் உயர்ந்தான். 2) வாழ்வில் உயர்ந்தனர்.
3) வாழ்வில் உணர்வான். 4) வாழ்வில் முன்னேறி விட்டாள்.

29. அந்தச் செடியிலே காணப்படுகின்ற,
1) ஒவ்வொரு பூக்களும் இனிமையானவை.
2) ஒவ்வொரு பூக்களும் இனியது.
3) ஒவ்வொரு பூவும் அழகியது.
4) ஒவ்வொரு பூக்களும் அழகியவை.

30. பிள்ளைகளின் தேவைகளை,
1) பெற்றோர் நிறைவு செய்தார்.
2) பெற்றோர்கள் நிறைவு செய்வார்.
3) பெற்றோர் நிறைவு செய்திலர்.
4) பெற்றோர் நிறைவு செய்வார்களோ?

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. உதவாக்கரை என்ற மரபுத் தொடரின் கருத்து,
1) ஆற்றங்கரை. 2) பயனற்றவன்.
3) உதவி கேட்பவன். 4) உதவ முடியாதவன்.

32. துன்பத்தில் உதவி செய்தல் என்ற கருத்தைத் தரும் மரபுத் தொடர்,
1) கை கொடுத்தல். 2) கையைக் சுட்டுதல். 3) காலைச் சுற்றுதல். 4)முகமாதல்.

33. துயரத்தின் உச்சத்தை விளக்குவதற்கு ஏற்ற உவமைத் தொடர்,
1) அக்கினியிற் பட்ட நெருப்பு போல.
2) மீகாமன் இல்லாத மரக்கலம் போல.
3) வளர்த்த கடா மார்பில் பாய்ந்தாற் போல.
4) ஏறா மடைக்கு நீர்பாய்ச்சியது போல.

34. ஆனைக்கும் அடி சறுக்கும் என்ற பழமொழியின் கருத்து,
1) வலிமை மிக்கவரும் வழுக்கி விழுவர்.
2) யானையும் கீழே விழக்கூடும்.
3) வலிமை மிக்கவரும் தவறக்கூடும்.
4) மிருகங்களின் பாதம் வலிமையற்றது.

35. சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பொருள் தரும் பழமொழி,
1) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
2) ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.
3) ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
4) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

**தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

மரியம் பீவியையும், மகனையும் பார்த்து, இருவரும் போங்கள் எல்லாம் சரியாகும் என்று சொல்ல மரியம் இருபது கோழியப்பம் சுட்டு எடுத்து சுமந்துச் சென்று சம்மந்தி வீட்டையடைய வேண்டா வெறுப்புடனே பாயும் கொடுத்துப் பழிபோட்ட பாவனையில் ஆதரவு செய்தே அழாத குறையினளாய் ஆலிமுக்காக அனைத்தும் பொருத்தேனென்று சொல்லியனுப்பிச் சுந்தரப் புதல்வனையும் நாலாம் நாளின் பின் நல்லது போ என்று சொன்னாள்.

36. போங்கள் என்பதன் எழுத்து வடிவம்,
1) போவீர்கள். 2) செல்லுங்கள். 3) போகும். 4)போனார்கள்.

37. இருப்பது கோழியப்பம் சுட்டுச் சென்றமையானது,
1) இலஞ்சத்தைக் குறிக்கின்றது.
2) உதவியைக் குறிக்கின்றது.
3) உணவு மிகுதியைக் குறிக்கின்றது.
4) அன்பையும், பண்பாட்டையும் குறிக்கின்றது.

38. ஆலிமுக்காக அனைத்தும் பொருத்தல் என்பதற்கான காரணம்,
1) அன்பின் மிகுதி. 2) அச்சத்தின் வெளிப்பாடு.
3) ஆலிம் மீதான மரியாதை. 4) ஆலிமைத் திருப்தி செய்தல்.

39. சுந்தரம் என்பது,
1) அழகு. 2) சுகம். 3) சோபனம். 4) மூத்தவன்.

40. இக் கவிதையின் எளிமைக்குக் காரணம்,
1) பேச்சு வழக்குச் சொற்களில் பிரயோகம்.
2) புணர்ச்சி முறைகள்.
3) வழக்கிலுள்ள சொற்களின்·பிரயோகம்.
4) அன்றாட வாழ்க்கை அனுபவங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி வினாத்தாள் - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Question Paper - 2008 December

T 22 I — **தமிழ்மொழியும் இலக்கியமும் - 11** — இரண்டு மணித்தியாலங்கள்

**சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் எழுதிய ஆக்கத்திற்குப் பொருத்தமான தலைப்பிடுக.

அ) பல்வேறு வாழ்க்கை அனுபவங்கள், எளிமை, இசைவளம், உணர்ச்சி வெளிப்பாடு, சிறந்த கற்பனை முதலியவற்றால் நிரம்பியவை நாட்டார் பாடல்களாகும். இசைத் துறையிலும், இலக்கியத் துறையிலும் பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ள நாட்டார் இலக்கியத்தின் உருவாக்கம், வகைகள், இலக்கியச் சிறப்புகள், இதைப் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் முதலியவற்றை விளக்கும் வகையிலமைந்த ஒரு கட்டுரை.

ஆ) ''பெற்றோல் வாசம் நுழையாத அந்தக் காலத்தில் நான்தான் எங்கள் கிராமத்துத் தேராக உலாவிவந்தேன். மருத்துவத் தேவை, திருமணச் சடங்கு, மரணச் சடங்கு, வணிக வியாபாரம் என்று எல்லாத் தேவைகளுக்கும் நான்தான் பயணித்தேன். இன்றோ ............'' என்று ஆரம்பமாகும் வகையிலமைந்த உடைந்த ஒரு மாட்டு வண்டியின் சுயசரிதை.

இ) சர்வதேச பெண்கள் தினம் உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் கொண்டாடப்படுகின்றது. பெண்களின் விடுதலை, சமத்துவம், சுதந்திரம் பற்றியதாக இத்தினத்தை மையப்படுத்தியதாய் மகளிரின் இன்றைய நிலை முதலியவற்றை விவரிக்கும் வகையிலான ஒரு வில்லுப்பாட்டு.

ஈ) யுத்தம் சகல இனத்தவரையும் பாதித்துள்ளது. நாடு முழுவதும் யுத்தத்தின் கோரப் பிடியில், அநாதைகள், விதவைகள், வலது குறைந்தோர் முதலியோர் உருவாகியுள்ளனர். மறுபுறத்தில் பொருளாதாரத்திலும் யுத்தம் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. போரின் கொடுமை, சமாதானம் ஏன் அவசியம், சமாதானம் ஏற்படுத்தும் மகிழ்ச்சி ஆகியவற்றை விளக்கும் வகையில் மாணவர் மன்றத்தில் நீங்கள் நிகழ்த்தும் சொற்பொழிவு.

உ) வாசிப்பு மனிதனை பூரணமாக்குகிறது என்ற கருத்தை விளக்கும் வகையில் இரு நண்பர்களுக்கிடையிலான உரையாடல்.

02. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ, ஈ எனும் உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையுமாறு சுருக்கி வேறுவேறாக எழுதவும்.

அ) சகுந்தலை, துஷ்யந்தன் ஒன்று சேருவதற்கும் பின்னர் பிரிவதற்கும், மீண்டும் சேர்வதற்கும் கணை யாழியே மூல காரணமாகின்றது. சகுந்தலை கதையோட்டத்திற்கும், கதைத்திருப்பத்திற்கும் கணை யாழியே கருவியாக அமைகின்றது. இருவரும் காந்தர்வ மணம் புரிந்தமைக்கு அத்தாட்சியாக அணிவிக்கப்பட்டதும் கணையாழியே. துருவாசமுனிவர் இட்ட சாபத்திற்கு விமோசனமாக அமைவதும் கணையாழியே. கணையாழியைத் துஷ்யந்தன் கண்டதும் சகுந்தலையின் நினைவு வந்து விடும் என்றும் கூறினார். இருவரும் பிரிந்து துன்பப்படுவதற்கும் காரணமாக இருந்ததும் அதே கணையாழி தொலைந்ததாகும். இருவரும் ஒருவரையொருவர் தவறாகக் கருதவும், தர்க்கிக்கவும் காரணமாக அமைந்ததும் கணையாழிதான். துஷ்யந்தனுக்குப் பழைய நினைவுகளை ஏற்படுத்தி இருவரையும் சேர்த்து வைத்ததும் கணையாழிதான்.

ஆ) ஒரு மொழி மற்றொரு மொழியுடன் தொடர்பு கொள்ளும்போது ஒரு மொழியிலுள்ள சொற்கள் மற்றொரு மொழியுடன் கலப்பது இயல்பாகும். மொழித் தொடர்பு என்பது வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். கடன் வாங்கப்பட்ட சொற்கள் இல்லாத மொழியே பெரும்பாலும் இல்லை. ஏனென்றால், எந்த நாடும் தனித்து வாழ முடியாது. மற்ற நாட்டுடன் தொடர்பு கொள்ளும்போது மொழித் தொடர்புக்கும் வழிகோலுகிறது என்று மொழியியல் பேறிஞர் ஒட்டோ யெஸ்பர்சன் கூறுவது இங்கு குறிப் பிடத்தக்கது. மொழி வளர்வதும், வளர்ச்சியடைவதும் பரிணாம வளர்ச்சியாலும், கடன் வாங்கலாலும் என்பவர் மொழியியல் அறிஞர்கள்.

இ) தேனீக்கள் மலர்களிலிருந்து தேனைச் சேகரிப்பது போலவே மாணவரும் நூல்களிலிருந்து அறிவைச் சேகரித்தல் வேண்டும். மாணவர் அறிவைச் சேகரிப்பதற்கு மிகவும் வாய்ப்பான இடம் நூலகமேயாகும். நூலகத்தில் மாணவர்கள் இன்பப் பொழுது போக்கிற்காகவும் வாசிக்கலாம். அறிவை ஈட்டுவதற்காகவும் வாசிக்கலாம். ஆராய்ச்சிக்காகவும் வாசிக்கலாம். பெரும்பாலான பாடசாலைகளில் சிறிய அளவிலேனும் நூல்கள் உள்ளன. சில பாடசாலைகளில் எல்லா வசதிகளையுமுடைய நல்ல நூலகங்கள் உள்ளன. இன்னும் சில பாடசாலைகளில் வகுப்பறை நூலகங்கள் உள்ளன. மாணவர் தமது வகுப்பறையில் பெறும் அறிவை விரிவாக்கி வளப்படுத்துவதற்கு இத்தகைய நூலகங்களை இயலுமான அளவு பயன்படுத்த வேண்டும்.

ஈ) எல்லா சமுதாயங்களினதும் இலக்கியங்கள் போலவே மலேசியத் தமிழ் இலக்கியத்தின் தோற்றுவாய் நாட்டார் இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. மலேசியத் தமிழர்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் என்ற வகையில் இந்தியாவின் தாக்கம் இப்படைப்புகளிலும் காணப்படவே செய்கின்றது. இருப்பினும் மலேசிய மண்ணுக்கு உரித்தான தனித்துவம், அம் மக்கள் சீனர்களுடனும், மலாயர்களுடனும் கொண்ட பண்பாட்டின் ஊடாட்டம் மற்றும் புதிய தொழில் வாழ்க்கை முறை என்பன தனித்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றன என்பதாகும்.

03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

தமிழ் ஒரு மொழி அடையாளமாக மட்டும் என்றும் இருக்க முடியாத ஒரு மொழியாகவே இருந்து வருகின்றது. எல்லா மொழிகளுக்கும், மொழி என்பதற்கு மேல் பண்பாடு, அரசியல், சமூகம் என்று வேறு அடையாளங்களும் உண்டு. இன்றைய புரிதலில் மொழியென்பது மனமும், உடலும், வாழ்வும் என விரிந்த பொருள் தரக்கூடியதாக புலப்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழ் என்பது இவற்றிலும் கூடுதலான உள்ளடக்கங்களைக் கொண்டுவிட்டது. இது கொண்டுள்ள கூடுதலான அர்த்த அடர்த்திக்கு இதன் தொன்மை ஒரு அடிப்படைக் காரணம் என்று எமக்குத் தெரியும். ஆனால், இதன் தொன்மையையும் மீறித் தமிழ் நமக்கு வேறுபல நினைவுகளைக் கொண்டு வருகிறது. மொழியென்றால் அது நினைவுக் தளத்திலும், நினைவுள் தளத்திலும், நினைவிலித் தளத்திலும் படிந்து கிடப்பது. ஒரு பேச்சில் மட்டுமின்றி மௌனத்திலும் அம் மொழியே நிறைந்து நிற்கின்றது. மௌனத்தை 'உலகப் பொதுமை' என்பவர் உண்டு. ஆனால், தமிழரின் மௌனம் தமிழ் மௌனம். வேறெந்த மொழியின் மௌனத்தைப் போன்று தனித்தன்மை வாய்ந்தது. அது தமிழ்க் கூறுகளால் ஆனது. தமிழின் இலக்கியங்கள் இவ் வகையில் பல நூறு தமிழ் மௌனங்களால் நிறைந்து கிடக்கின்றன.

1) மொழிக்கான பொதுவான இயல்பு என்று கூறப்படுவது யாது?
2) சம காலத்தில் மொழிக்கு எவ்வாறு பொருள் விளக்கம் கூறுவர்?
3) உலக மொழிகளுக்கும் தமிழ் மொழிக்கும் இடையிலான முக்கிய வேறுபாடு எதுவென்று கூறப்படுகின்றது?
4) மொழி எங்கெல்லாம் தேங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது?
5) தமிழ் மொழிஉலகமொழிகளுடன்ஒப்பிட்டுஎவ்வாறு அடையாளம்காட்டப்படுகின்றது?
6) தமிழ் இலக்கியங்கள் பற்றி கட்டுரையாளர் வெளிப்படுத்தும் முடிவு யாது?
7) பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
அ) தொன்மை ஆ) நினைவுத்தளம் இ) பொதுமை

04. பெரு நகரங்களை அண்மிக்கும்போது பயணிகள் குப்பை மேடுகளையும், அதன்மோசமான துர்வாடையினையுமே பொதுவாகச் சந்திக்கின்றனர். பிரதேசத்தின் சுகாதார நலனைப் பேணும் பொறுப்புடைய நகர சபைகளும், மாநகர சபைகளும் இவ் விடயத்தில் பாராமுகமாகவே நடந்துகொள்கின்றன. பயணிகள், குடியிருப்பாளர்கள் இவற்றால் அனுபவிக்கும் அசௌகரியங்களை எடுத்துரைக்கும் வகையில் பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி வினாத்தாள் - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Question Paper 2008 December

T 22 I — **தமிழ்மொழியும் இலக்கியமும் - 111** — இரண்டு மணித்தியாலங்கள்

**பகுதி 1, 11 இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் , பகுதி 111 இல் 03, 04 ஆகியவற்றோடு மூன்று வினாக்களையும் தெரிந்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

**பகுதி - 1**

01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

01) ''வெள்ளத்தால் அழியாது செந்தழலால் வேகாது.'' என்று விவரிக்கப்படுவது எது?

02) ''பெருந் தடங்கட் பிறைநுதலார்க் கெலாம்.'' என்ற வரியில் இடம்பெறும் அணியினை எழுதுக.

03) ''இடைச்சி தந்த மோர் பற்றி வசைபாடும்'' காளமேகம் மோரை எதற்கு உருவகித்துப் பாடியுள்ளார்?

04) ''ஒரு பதிவிரதை சரிதம்'' என்ற சிறுகதையில் இடம்பெறும் அறிமுகப் பகுதி எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

05) ''மின்னும் தார் வீமன் தன் மெய்மரபிற் செம்மைசேர் கன்னி யான் ஆகில்.'' இக் கூற்று யாரால் கூறப்படுகின்றது?

06) ''விடியுமா'' என்ற சிறுகதையில் இடம்பெறும் ''சிவராமையர்'' என்ற பாத்திரத்தின் உடல்நிலை பற்றித் தந்தியில் என்ன கூறப்படுகின்றது?

07) ''அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல உற்றுழித் தீர்வார் உறவல்லர்.'' இப் பாடல் வரிகளில் இடம்பெறும் உவமையினை எடுத்துக் காட்டுக.

08)
கச்சி ஒருகால் மிதியா ஒரு காலால்
தத்து நீர்க் கண் தஞ்சைதான் மிதியாப் - பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமே நம்
தோழியர் கோக் கிள்ளி களிறு

இப்பாடலில் கிள்ளிவளவனின் யானையானது வீரம் எடுத்துரைக்குமாற்றின் சிறப்புகளை விளக்குக.

09)
ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ யான் வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ - ஊழி
திரண்டதோ கங்குல் தினகரனும் தேரும்
உருண்டவோ பாதாளத்துள்

தலைவியின் உள்ளத்து உணர்வுகள் இப்பாடலில் வெளிப்படுமாற்றிலுள்ள சிறப்புகளை விளக்குக.

10)
நல்லாய் வரும் பிள்ளை நல்லுரையொன்றாற்றிருந்தும்
அல்லது நூறோதிடினும் ஆகாதே - நல் வளர்ச்சி
மாட்டின் பிணிக்கு மருந்தா யொரு சூடு
நாட்டில் வழங்கும் மொழி

இப் பாடலில் இடம்பெறும் பழமொழியினை எடுத்துக் காட்டி, இதன் மூலம் புலவர் கூற முற்படும் கருத்தை எழுதுக.

**பகுதி - 11**

02. பின்வரும் பாடல்களின், பொருளை இக்கால மொழிநடையில் எழுதுக. அடிக்கோடிட்ட பகுதிகளின் இலக்கியச் சிறப்பினை எழுதுக.

1)
குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்வழியாம் என்னும் நடுவு நிலைமையில்
கல்வி யழகே அழகு.

2)
யாவர்க்குமாம் இறைவிற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே

3)
வெட்டளவை மெத்தளவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டு உருவும் கோல் பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசு மரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

4)
நிலவாய் விளங் குதலானீள் வான் படிந்து
சில போதுலாவுதலாற் சென்ற - தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து

**பகுதி - 111**

**3ஆம் வினாவிற்கும் 4,5,6,7 ஆகிய வினாக்களில் எவையேனும் இரண்டிற்கு விடை எழுதுக.**

03. இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

அ) முத்தொள்ளாயிரம் என்ற இலக்கியத்தில் மூவேந்தர்கள் சிறப்பிக்கப் படுமாற்றினை தொகுத்து எழுதுக.

ஆ) கூறவந்த கருத்துக்களைச் சுவாரஸ்யமாகவும், பொருத்தமான மேற்கோள்களைப் பயன்படுத்தியும் விளக்கு வதிலும் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப் பிள்ளை தனிச் சிறப்பு மிக்கவராவார். நல்ல மரமும், நச்சு மரமும் என்ற கட்டுரைப் பகுதியை மனதிற் கொண்டு இக் கூற்றின் பொருத்தப் பாட்டினை ஆராய்க.

இ) கருணாகரன் மீது மங்கையர்க்கரசி கொண்ட காதல் வெளிப்படுமாற்றினை ''மங்கையர்க்கரசியின் காதல்'' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

04. பின்வருவனவற்றுள் மூன்று பகுதிகளுக்கு மட்டும் விடையளிக்குக.

அ) சொல்வன்மை, பயனில் சொல்லாமைப் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களை நீதிப்பாடல்கள் என்ற பகுதியை ஆதாரமாகக் கொண்டு தொகுத்துத் தருக.

ஆ) கவிச் சக்கரவர்த்தி என்ற நாடகத்தில் இடம்பெறும் சடையப்ப வள்ளல், சோழ மன்னன் குலோத்துங்க சோழன் ஆகிய பாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளவற்றின் சிறப்புகளை விளக்குக.

இ) ''வசனக் கவிதையின் முன்னோடி பாரதியேயாவார்.'' என்பதைச் சுவாமி விபுலாநந்தர் விளக்குமாற்றினை எடுத்துக்காட்டுக.

ஈ) கடற்புரம் என்ற கவிதையில் இடம்பெறும் மீனவரின் துயரம் தோய்ந்த வாழ்க்கைச் சித்திரிப்பை விளக்குக.

05. ''குழந்தைகள் அன்பும், அறிவும் நிரம்பியவர்களாவார்.'' என்ற கருத்தை நட்சத்திரக் குழந்தைகள், பார்வைகள் ஆகிய சிறுகதைகளை மையப்படுத்தி விளக்குக.

06. பின்வருவனவற்றுள் மூன்று பகுதிகளுக்கு மட்டும் விடையளிக்குக.

அ) இயற்கையழகில் பாரதி கொண்டுள்ள ஈடுபாட்டைச் சுவாமி விபுலாநந்தர் விளக்குமாற்றினை எழுதுக.

ஆ) ''ஓடுகின்ற மேகங்களே ............. '' எனும் நந்திக் கலம்பகப் பாடலில் கவிஞரின் கற்பனை வெளிப்படுமாற்றினை விளக்குக.

இ) மலையக மக்களின் தொழில் முறைமைகளை மலையக நாட்டார் பாடல்கள் வெளிப்படுத்துமாற்றினை எடுத்துக் காட்டுக.

ஈ) நாலடியார் பாடல்களில் காணப்படும் உவமைச் சிறப்புகளை விளக்குக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org